# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை

## கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள்

## கொள்கை விளக்கக் குறிப்பு
2024 - 2025

மானியக் கோரிக்கை எண். 18

**ஆர். எஸ். ராஜகண்ணப்பன்**
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.

**கொள்கை விளக்கக் குறிப்பு**
**2024–2025**

**பொருளடக்கம்**


| வ. எண் | துறைகள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | பட்டுவளர்ச்சித் துறை | 1–65 |
| 2 | தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் | 66–107 |
| 3 | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் | 108–148 |
| 4 | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | 149–160 |

## பட்டுவளர்ச்சித் துறை

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | தொலைநோக்குப் பார்வை | 1 |
| | தொலைநோக்கு செயல் | 1 |
| 1. | பட்டின் வரலாறு | 3 |
| 2. | இந்தியாவில் பட்டுத் தொழில் ஒரு கண்ணோட்டம் | 4 |
| 3. | பட்டுப்புழு வளர்ப்பின் அனுகூலங்கள் | 7 |
| 4. | மாநிலத்தின் பட்டுத் தொழில் பற்றிய குறிப்பு | 9 |
| 5. | துறையைப் பற்றி | 11 |
| 6. | துறையின் மனிதவளம் | 12 |
| 7. | துறையின் நலத்திட்டங்கள் | 13 |
| 8. | தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம் | 24 |
| 9. | பட்டுவளர்ச்சித் துறையால் வழங்கப்படும் முக்கிய சேவைகள் | 26 |
| 10. | துறையின் பல்வேறு அலகுகள் மூலம் பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு தேவையான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்பு வசதிகள் வழங்குதல் | 29 |
| 11. | பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி | 57 |
| 12. | பட்டுப்புழுவளர்ப்பிற்கான காப்பீட்டுத் திட்டம் | 58 |
| 13. | நிலையான வளர்ச்சி இலக்குகள் | 60 |
| 14. | 2024–2025–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | 65 |

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்
## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 66 |
| 2. | நிறுவனத்தின் தலையாய நோக்கங்கள் | 68 |
| 3. | நிருவாக அமைப்பு | 72 |
| 4. | நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals) | 74 |
| 5. | கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தும் முயற்சிகள் | 79 |
| 6. | பூம்புகார் உற்பத்தி நிலையங்கள் | 88 |
| 7. | தகவல் தொடர்பு தொழில்நுட்ப செயல்பாடுகள் (IT Initiatives) | 89 |
| 8. | கைவினைஞர்களுக்கான மேம்பாடு மற்றும் நலத்திட்டங்கள் | 94 |
| 9. | கைவினைப் பொருட்களுக்கான புவிசார் குறியீடு | 103 |
| 10. | மாமல்லபுரம் – ஓர் உலகக் கற்சிற்ப நகரம் | 106 |
| 11. | நிறுவனத்தின் தொலைநோக்கு பார்வை | 106 |




## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 108 |
| 1. | நோக்கங்கள் | 109 |
| 2. | நிருவாகம் | 109 |
| 3. | நிலையான வளர்ச்சி இலக்குகள் | 110 |
| 4. | 2023–2024–ஆம் நிதியாண்டில் வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் | 112 |
| 5. | புதிய வணிக வளர்ச்சி முன்னெடுப்புகள் | 115 |
| 6. | கதர் | 117 |
| 7. | மண்பாண்டத் தொழிலாளர்களுக்கான நலத்திட்டங்கள் | 127 |
| 8. | வணிக அபிவிருத்தி நிதியுதவி (MDA) | 128 |
| 9. | கிராமத் தொழில்கள் | 130 |
| 10. | தச்சு மற்றும் கருமாரத் தொழில் | 132 |
| 11. | காலணி தொழில் | 134 |
| 12. | கைமுறை காகித அலகுகள் | 135 |
| 13. | தேனீ வளர்ப்பு தொழில் | 136 |
| 14. | இதர கிராமத் தொழில் அலகுகள் | 138 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 15. | வணிகம் | 139 |
| 16. | தொழில் கூட்டுறவு சங்கங்கள் | 143 |
| 17. | பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) | 144 |
| 18. | கதர் கிராமப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை | 146 |
| 19. | அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி | 147 |




## தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்
## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| | முன்னுரை | 149 |
| 1 | நோக்கங்கள் | 149 |
| 2 | நிருவாகம் | 150 |
| 3 | வரவு – செலவு | 152 |
| 4 | பதநீர் இறக்குவதற்கான உரிமம் | 152 |
| 5 | 2023–2024–ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் | 152 |
| 6 | வணிகம் | 156 |
| 7 | பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை | 160 |

## பட்டுவளர்ச்சித் துறை

**"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்**
**தாழாது உஞற்று பவர்"**

**– திருவள்ளுவர்**

***'ஊழ்' என்பது வெல்ல முடியாத ஒன்று என்பார்கள். சோர்வில்லாமல் முயற்சி மேற்கொள்பவர்கள் அந்த ஊழையும் தோல்வி அடையச் செய்வார்கள்.***

***– கலைஞர்***

### தொலைநோக்குப் பார்வை

கிராமப்புற மற்றும் புறநகர மக்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்பாடு அடையச் செய்தல்; பட்டுத் தொழிலின் பல்வேறு வாய்ப்புகள் வழியாக பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல்; இறக்குமதிக்கு மாற்றான வெண்பட்டு உற்பத்தியில் தன்னிறைவு அடைதல் மற்றும் நாட்டிலேயே வெண்பட்டு உற்பத்தியில் முன்னோடி மாநிலமாக மாறுதல்.

### தொலைநோக்கு செயல்

- கச்சாப்பட்டு உற்பத்தியில் தன்னிறைவு பெற மல்பெரி பரப்பு மற்றும் பட்டுக்கூடு

உற்பத்திக்கு பிந்தைய செயல்பாடுகளை விரிவுபடுத்துதல்.

- பட்டு உற்பத்தியின் அனைத்து நிலைகளிலும் தரம் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்த பங்குதாரர்களின் திறனை பயிற்சிகள் மூலம் மேம்படுத்துவது.

பல்லாயிரம் ஆண்டுகளாக மனித குலத்தை தொடர்ந்து கவர்ந்துவரும் ஒரே துணி வகையாக 'பட்டு' விளங்குகிறது. பட்டின் அழகு அதன் இயற்கையான பளபளப்பு, மென்மை, பிரகாசம், மிருதுவான அமைப்பு, இணையற்ற கம்பீரம், பன்முகத் தன்மை, நீடித்த உழைப்பு மற்றும் உடுத்தும் தன்மை போன்ற உன்னதமான குணங்களில் மட்டுமல்லாமல், அதன் வசீகரம், வளமான வரலாறு, கைவினைத்திறன் மற்றும் கலாச்சார பாரம்பரியத்துடன் ஒவ்வொரு இழையிலும் பிணைந்துள்ளது. எனவே அது காலத்தால் அழியாத கவர்ச்சி மற்றும் ஒப்பிடமுடியாத நேர்த்தியுடன் தொடர்ந்து வசீகரித்து எழுச்சியூட்டுகிறது.



## 1. பட்டின் வரலாறு

மிகச்சிறந்த இயற்கை இழைகளில் ஒன்றான பட்டு ஒரு வளமான பாரம்பரியத்தையும் மரபையும் தன்னகத்தே கொண்டுள்ளது. சீன பதிவுகளின்படி, கிமு 2700–இல் ஹான் வம்சத்தின் சீனப் பேரரசி 'ஜி–லிங்'கால் பட்டு கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் பட்டு நூல் மற்றும் பட்டுத்துணிகள் புத்த துறவிகளால் பட்டுப் பாதை வழியாகவே இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டன.

தமிழ்நாட்டில் பட்டுப் பயன்படுத்தப்பட்டதை கலித்தொகை (எட்டுத்தொகை), பொருநராற்றுப்படை மற்றும் மதுரைக்காஞ்சி (பத்துப்பாட்டு) போன்ற சங்க இலக்கியங்களிலிருந்து அறியமுடிகிறது.

கனிஷ்கர் பேரரசு காலத்தில் இந்தியாவிற்கும் கிரேக்க/ரோமானிய நாடுகளுக்கும் இடையே பட்டு வணிகம் இருந்ததாக வரலாற்றுச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. 9 முதல் 13–ஆம் நூற்றாண்டுகளில் தென்தமிழகத்தை ஆண்ட சோழப் பேரரசு பட்டு உற்பத்தியை வளர்த்தெடுத்தாக அறியப்படுகிறது.

18–ஆம் நூற்றாண்டில் மைசூர் மன்னர் திப்பு சுல்தான் காலத்தில் கர்நாடகாவில் நவீன பட்டுப்புழுவளர்ப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. 1960–களின் முற்பகுதியில், கர்நாடகாவின் எல்லைப் பகுதிகளான ஒசூர் மற்றும் தாளவாடி வழியாக தமிழ்நாட்டில் பட்டுவளர்ப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

## 2. இந்தியாவில் பட்டுத் தொழில் ஒரு கண்ணோட்டம்

இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாட்டில் வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்கள் ஊரகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தியாவில் வெகுஅளவிலான மக்கள் உணவு மற்றும் பணப் பயிர்களை சாகுபடி செய்வதில் ஈடுபட்டுள்ளனர்.

குறைவான நிலம், குறைந்த வருமானம் மற்றும் ஒரு வருடத்தில் ஒன்று அல்லது இரண்டு பருவங்களுக்கு மட்டுமே வேளாண்மை மேற்கொள்ள முடியும் என்ற நிலையிலுள்ள கிராம மக்கள் பிற பணப் பயிர்களுடன் பட்டுவளர்ப்பு, கால்நடை வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்பு போன்ற ஊரகத் தொழில்களை நோக்கிச் செல்கின்றனர்.



இந்தியாவில் சுமார் 90 இலட்சம் மக்கள் மல்பெரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு, பட்டு நூற்பு, பட்டு முறுக்கேற்றுதல் மற்றும் பட்டு நெசவு ஆகிய பட்டுத் தொழிலின் பல்வேறு அங்கங்களில் ஈடுபட்டு வருகின்றனர். வேளாண்மை சார்ந்த ஊரக குடிசைத் தொழிலாக பட்டுத் தொழில் இருப்பதன் மூலம் ஊரகப் பகுதிகளிலுள்ள மகளிருக்கு அதிகப்படியான வேலை வாய்ப்பினை வழங்குகிறது.

உலகளவில் மல்பெரி, ஈரி, டசார் மற்றும் மூகா எனப்படும் நான்கு வகையான பட்டுகளையும் உற்பத்தி செய்வதுடன், அசாமைச் சுற்றியுள்ள வடகிழக்கு மாநிலங்களில் இருந்து 'மூகா பட்டு' எனப்படும் விலையுயர்ந்த, பளபளப்பான தங்க–மஞ்சள் நிற பட்டுநூலினை உற்பத்தி செய்யும் உலகின் ஒரே நாடாக இந்தியா திகழ்கிறது.

இந்தியாவில் மல்பெரி பட்டு பிரதானமாக கர்நாடகம், ஆந்திர பிரதேசம், தமிழ்நாடு, ஜம்மு & காஷ்மீர் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலும், மல்பெரி சாராத (வன்யா) பட்டு ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், ஒடிசா மற்றும் வட கிழக்கு மாநிலங்களிலும் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தியாவின் கச்சாப்பட்டு உற்பத்தி 2023–2024

| வ. எண் | பட்டின் வகை | கச்சாப்பட்டு உற்பத்தி (மெட்ரிக் டன்களில்) |
|---|---|---|
| 1. | மல்பெரி | 29892 |
| 2. | ஈரி | 7183 |
| 3. | டசார் | 1586 |
| 4. | மூகா | 252 |
| மொத்தம் | | 38913 |

இந்தியா உலக அளவில் பட்டு உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்திலும் மற்றும் பட்டினை அதிகப்படியாக பயன்படுத்தும் நாடாகவும் உள்ளது. இந்தியாவின் மொத்த பட்டு உற்பத்தியில் 77% பட்டு பெருமளவில் மேற்கொள்ளப்படும் மல்பெரி பட்டுவளர்ப்பு மூலம் கிடைக்கிறது. இந்தியாவில் பட்டிற்கென உறுதியான பாரம்பரியம் மற்றும் கலாச்சாரம் சார்ந்த உள்நாட்டு சந்தை உள்ளது.

இந்தியாவின் பட்டு உற்பத்தி நீடித்த நிலைத்தன்மை, தர மேம்பாடு மற்றும் சந்தை பன்முகத்தன்மையை நோக்கமாக கொண்டு பரிணமித்து வருகிறது. அரசின் தொடர் ஆதரவு, புதுமையான தொழில்நுட்பங்கள், அதிகரித்துவரும் உலக அளவிலான தேவை ஆகியவை இந்திய பட்டுத்



தொழிலை வளர்ச்சிப் பாதைக்கு கொண்டுச்செல்லும் முக்கிய காரணிகளாக விளங்குகின்றன.

**3. பட்டுப்புழு வளர்ப்பின் அனுகூலங்கள்**

- ❖ குறைந்தபட்ச ஒரு முறை முதலீடு மற்றும் குறுகிய காலத்தில் அறுவடை செய்யக்கூடிய பாரம்பரியமிக்க பழமையான தொழில்.
- ❖ பட்டுவளர்ப்புத் தொழிலை குறைந்த நிலப்பரப்பிலும் மேற்கொள்ள முடியும். ஆகையால், சிறு மற்றும் குறு விவசாயிகளே அதிகப்படியாக பட்டுவளர்ப்புத் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.
- ❖ பட்டுவளர்ப்புத் தொழில் ஊரகப் பகுதிகளிலுள்ள மக்களுக்கு சீரான இடைவெளியில் வருமானம் அளிப்பதன் காரணமாக அவர்களை வறுமையிலிருந்து மீளச்செய்கிறது.
- ❖ தமிழ்நாடு வெப்ப மண்டல பகுதியாக உள்ளதால், வருடம் முழுவதும் மல்பெரி

சாகுபடி செய்து ஒரு வருடத்தில் சராசரியாக ஒரு ஏக்கருக்கு 5 முதல் 6 பட்டுப்புழு வளர்ப்புகள் வரை மேற்கொள்ளலாம்.

- ❖ அதிகப்படியான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதால் மக்கள் ஊரகப் பகுதிகளிலிருந்து நகர்ப்புற பகுதிகளுக்கு இடம்பெயர்தலை தடுக்கிறது.
- ❖ மல்பெரி ஒரு முறை நடவு செய்தால் 15 முதல் 20 ஆண்டுகள் வரை இலை மகசூல் மற்றும் தரத்தில் எவ்வித குறைவும் இன்றி பட்டுப்புழு வளர்ப்பிற்கு உதவுகிறது.
- ❖ 60 சதவீதத்திற்கும் அதிகமான பட்டு வளர்ப்பு செயல்பாடுகள் மகளிரால் மேற்கொள்ளப்படுவதால் அது மகளிர் மேம்பாட்டிற்கு உதவுவதோடு பாலின சமத்துவத்தையும் உறுதி செய்கிறது.



- ❖ குடிசை மற்றும் பெரிய அளவிலான ஜவுளித் தொழிற்சாலைகளுக்கு கச்சாப் பொருள் வழங்குகிறது.

## 4. மாநிலத்தின் பட்டுத்தொழில் பற்றிய குறிப்பு

பட்டு உற்பத்தியில் பல ஆண்டுகளாக தொடர்ந்து முதன்மை மாநிலமாக திகழும் தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலில் தன்னுடைய ஆளுமையை உறுதிப்படுத்தியுள்ளது. காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், சிறுமுகை மற்றும் சேலம் ஆகிய பகுதிகள் அவற்றின் பாரம்பரியமிக்க கலைநயத்துடன் கூடிய வடிவமைப்புகளாலான கைத்தறி பட்டுப்புடவைகள் மற்றும் வேட்டிகள் மூலம் பிரபலமடைந்துள்ளன.

இந்தியாவில் பட்டு உற்பத்தியில் முன்னணி மாநிலங்களில் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு, மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழுவளர்ப்புக்கு மிகவும் சாதகமான வேளாண்–பருவநிலையைக் கொண்டுள்ளது. பட்டு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதற்கு பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பட்டு நூற்பு தொழில் மேற்கொள்ள அரசு தொடர்ந்து உதவியளித்து வருகிறது.

தமிழ்நாட்டில் பரவலாக மல்பெரி பட்டுவளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலத்தின் மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த மாவட்டங்கள் பட்டுக்கூடு உற்பத்தியில் முதன்மையான மாவட்டங்களாகவும், பட்டுநூற்பு செயல்பாடுகளுக்கு தருமபுரி முதன்மையான மாவட்டமாகவும் உள்ளது. பட்டுத்தொழில் பிரபலம் அடையாத மாவட்டங்களில் தொகுப்பு முறையில் பட்டுத்தொழிலை விரிவாக்கிட துறையால் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மல்பெரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பட்டு நூற்பு தொழில்களில் நவீன தொழில்நுட்பங்களை கடைப்பிடிப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. தற்போது, தமிழ்நாட்டில் 21,240 விவசாயிகள் 41,910 ஏக்கர் பரப்பளவில் மல்பெரி சாகுபடி செய்து வருகின்றனர். அவற்றுள், 9900 ஏக்கர் மல்பெரி 83 வளமிகு தொகுப்புகளில் உள்ளது. மேலும் 143 உரிமம் பெற்ற பட்டுநூற்பாளர்கள் உள்ளனர்.

தரமான பட்டுக்கு பெயர்பெற்ற தமிழ்நாடு, 2023–2024–ஆம் ஆண்டில் 2,678 மெட்ரிக் டன் கச்சாப்பட்டு உற்பத்தி செய்துள்ளது. இறக்குமதி



செய்யப்படும் வெண்பட்டுக்கு மாற்றாக, தமிழ்நாடு 2,617 மெட்ரிக் டன் வெண்பட்டினை உற்பத்தி செய்து, மல்பெரி வெண்பட்டு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் தேசிய அளவில் இரண்டாம் இடம் வகிக்கிறது.

மொத்த கச்சாப் பட்டு உற்பத்தியில் 98% வெண்பட்டு உற்பத்தி செய்யும் இந்தியாவின் ஒரே மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது.

## 5. துறையைப் பற்றி

1956–ஆம் ஆண்டு மொழிவாரியான மாநிலங்களின் சீரமைப்புக்கு முன்னதாக தாளவாடி மற்றும் ஓசூரின் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் பட்டுவளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது. மறுசீரமைப்புக்குப் பின், மேம்படுத்தப்பட்ட பட்டுப்புழு கலப்பினங்கள் மற்றும் அவற்றின் அதிக பட்டுக்கூடு அறுவடை ஆகியவை பட்டுவளர்ப்புத் தொழிலை இதர மாவட்டங்களுக்குக் கொண்டுசென்றது. தீவிர பட்டுவளர்ப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் தாக்கம் மற்றும் பட்டுத்தொழிலின் வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வேளாண் சமூகத்தினருக்கு சீரான கால இடைவெளிகளில் வருமானம் அளிக்கும் திறன்

ஆகியவற்றால் ஊக்கம் பெற்று, தமிழ்நாடு அரசு ஏப்ரல் 1979–இல் சேலத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் வகையில் தனித் துறையாக பட்டுவளர்ச்சித் துறையை உருவாக்கியது.

## 6. துறையின் மனிதவளம்

பட்டுவளர்ச்சித் துறை சீரிய முறையில் நிரவலாக்கப்பட்ட, விரிவாக்க அமைப்புகளுக்கான தொழில்நுட்பப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களை கொண்டுள்ளது. மாநிலத்தில் பல்வேறு பட்டுவளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்காக அரசால் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இயக்குநர் | 1 |
| 2 | இணை இயக்குநர் | 3 |
| 3 | துணை இயக்குநர் (நிருவாகம்) | 1 |
| 4 | துணை இயக்குநர் | 9 |
| 5 | உதவி இயக்குநர் | 27 |
| 6 | பட்டு ஆய்வாளர் | 67 |
| 7 | உதவி பட்டு ஆய்வாளர் | 179 |
| 8 | இளநிலை பட்டு ஆய்வாளர் | 824 |
| 9 | அமைச்சுப் பணியாளர், மற்றோர் | 316 |
| | **மொத்தம்** | **1,427** |



## 7. துறையின் நலத்திட்டங்கள்

நாட்டின் ஊரகப் பகுதிகளில் வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்கம், வருவாய் அதிகரிப்பு மற்றும் மகளிர் மேம்பாடு ஆகியவற்றில் பட்டுவளர்ப்புத் தொழில் முக்கிய பங்குவகிக்கிறது. மாநிலத்தில் பட்டுத்தொழிலின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் பட்டு விவசாயிகளின் முக்கிய பங்களிப்பினை அங்கீகரித்திடவும், விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வு காணவும், அவர்களது சமூகப் பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்திடவும் துறையால் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது.

விதை உற்பத்தி, பட்டுக்கூடு உற்பத்திக்கு முந்தைய மற்றும் பிந்தைய நிலையின் பங்குதாரர்களான பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு உதவிடும் வகையில் மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் பல்வேறு பயனாளிகள் சார்ந்த நலத்திட்டங்கள் மாநில திட்டம் மற்றும் மத்திய பகுதி திட்டம் (சில்க் சமக்ரா) ஆகியவற்றின் கீழ் இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பட்டுத்தொழில் வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த திட்டமான "சில்க் சமக்ரா-2" திட்டம், இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் பட்டுத் தொழிலின் முழுமையான வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு தேவையான நிதி உதவியை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

2024-2025-ஆம் ஆண்டில் நலத்திட்டங்களை செயல்படுத்த மாநில அரசு ரூ.4259.00 இலட்சம் நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், 2024-2025-ஆம் ஆண்டு சில்க் சமக்ரா-2 திட்டத்தின் கீழ் நலத்திட்டங்களை செயல்படுத்த ஒன்றிய அரசிடமிருந்து ரூ. 5000.00 இலட்சம் நிதி கோர முடிவு செய்யப்பட்டுள்ளது.

### 7.1. கிசான் மல்பெரி நாற்றங்கால் அமைக்க உதவியளித்தல்

பொதுவாக, மல்பெரி செடி விதைக் கரணைகள் மூலம் பெருக்கப்படுகிறது. எனவே, அதிக உயிர்வாழும் விகிதத்துடன் கூடிய ஆரோக்கியமான மல்பெரி நாற்றுகளைப் பெறுவதற்கு விதைக்குச்சிகள் மூலம் மல்பெரி நாற்றங்கால் அமைக்க பரிந்துரைக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு தரமான மல்பெரி நாற்றுகள் தொடர்ந்து வழங்கப்படுவதை



உறுதி செய்வதற்காக, விவசாயிகள் தங்கள் பண்ணைகளில் 'கிசான் நாற்றங்கால்' அமைத்து மல்பெரி நாற்றுகள் உற்பத்தி செய்ய உதவி அளிக்கப்படுகிறது. 2023-2024-ஆம் ஆண்டில், 32 ஏக்கரில் மல்பெரி நாற்றுகள் உற்பத்தி செய்த 45 விவசாயிகளுக்கு ரூ.36.45 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### 7.2. மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழுவளர்ப்பு மேற்கொள்ள உதவியளித்தல்

பட்டுப்புழுவளர்ப்பில், பட்டுப்புழுக்களுக்கு தரமான மல்பெரி இலைகளை உணவளிக்க நன்கு நிறுவப்பட்ட மல்பெரித் தோட்டம் மற்றும் பட்டுப்புழுக்களுக்குத் தேவையான நுண் தட்பவெப்பநிலைகளை பராமரிக்க ஏதுவாக தனி புழுவளர்ப்பு மனை ஆகிய இரண்டும் அவசியமாகிறது. பெரும்பாலான சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இச்செயல்பாடுகளுக்கான ஆரம்ப முதலீடு அதிகமாக இருப்பதால், மல்பெரி நடவு செய்தல் மற்றும் பட்டுப்புழுவளர்ப்பு மனை அமைக்க விவசாயிகளுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. 2023-2024-ஆம் ஆண்டில், 6500 ஏக்கரில் புதியதாக மல்பெரி நடவு செய்த 4034 விவசாயிகளுக்கு ரூ.1204.50 இலட்சம்

நிதி உதவியும், தனி புழுவளர்ப்பு மனை அமைத்த 1673 விவசாயிகளுக்கு ரூ.3738.225 இலட்சம் நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளது.

### 7.3. பட்டுப்புழுவளர்ப்புத் தளவாடங்கள், பண்ணை உபகரணங்கள் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துப்பொருட்களுக்கான உதவிகள் வழங்குதல்

மல்பெரித் தோட்ட பராமரிப்பு மற்றும் பட்டுப்புழுவளர்ப்பில் வேலையாட்களின் பயன்பாட்டைக் குறைத்து, நவீன பட்டுப்புழுவளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் பயன்பாட்டை அதிகரித்திட பண்ணை இயந்திரமயமாக்கல் ஊக்குவிக்கப்படுகிறது. வெற்றிகரமான பட்டுக்கூடு அறுவடை மற்றும் நல்ல உற்பத்தித் திறன் பெற விவசாயிகள், பரிந்துரைக்கப்படும் நோய்த்தடுப்புமுறைகளை முறையாக கடைபிடிக்க வேண்டும். ஆகவே, விவசாயிகளுக்கு பட்டுப்புழுவளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் கிருமிநாசினிகள் கொள்முதல் செய்ய நிதி உதவி அளிக்கப்படுகிறது. 2023–2024–ஆம் ஆண்டில் ரூ.1140.375 இலட்சம் மதிப்பில் 2000 பட்டு விவசாயிகளுக்கு பட்டுப் புழுவளர்ப்புத் தளவாடங்களும், 1000 பட்டு விவசாயிகளுக்கு கிருமிநாசினிகளும், 300 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு பவர் டில்லர்களும் வழங்கப்பட்டுள்ளது.



### 7.4. பயனாளி திறன் மேம்பாட்டு திட்டம்

பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களை மேம்படுத்திட பயனாளி திறன் மேம்பாட்டுப் பயிற்சி அவசியப்படுகிறது. உற்பத்தித் திறனை அதிகரிக்க நவீன பட்டுவளர்ப்பு தொழில்நுட்பங்கள் குறித்த செயல்முறைப் பயிற்சிகள் வழங்கி திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும். இத்திட்டத்தில் மல்பெரி சாகுபடி, பட்டுப்புழுவளர்ப்பு மற்றும் பட்டுநூற்பு சார்ந்த அனைத்து செயல்பாடுகளும் அடங்கும். 2023–2024–ஆம் ஆண்டில், ரூ.70.00 இலட்சம் மதிப்பில் 1000 பட்டு விவசாயிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

### 7.5. இளம்புழுவளர்ப்பு மையம் அமைக்க உதவியளித்தல்

முட்டை பொரிப்பிலிருந்து இரண்டாம் தோலுரிப்பு வரையிலான 7 நாட்கள் வயதுடைய பட்டுப்புழுக்கள்

'இளம்புழுக்கள்' எனவும், இந்த இளம்புழுக்களை பிரத்யேகமாக வளர்க்கும் மையங்கள் 'இளம்புழுவளர்ப்பு மையம்' எனவும் அழைக்கப்படுகின்றன.

இளம்புழுவளர்ப்பில் சிறப்பு கவனிப்பு, புழுவளர்ப்புமனைக்குள் சுகாதாரம் பேணுதல் மற்றும் தேவையான தட்ப வெப்ப நிலைகளைப் பராமரித்து தரமான மல்பெரி இலைகளை உணவளித்தல் ஆகியவை அவசியமாகிறது. இளம்புழுக்களை பெற்று பட்டுப்புழுவளர்ப்பு மேற்கொள்வதன் மூலம் விவசாயிகளுக்கு 7 புழுவளர்ப்பு நாட்கள் சேமிக்கப்படுவதுடன் உற்பத்தித் திறனும் அதிகரிக்கிறது. ஆகவே, பட்டு விவசாயிகளுக்கு தரமான இளம்புழுக்கள் தொடர்ந்து வழங்கப்படுவதை உறுதி செய்திட, இளம்புழுவளர்ப்பு மையங்கள் அமைக்க விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகிறது. தற்போது 35 இளம்புழுவளர்ப்பு மையங்கள் தனியார் தொழில்முனைவோர்களால் மாநிலத்தில் நடத்தப்பட்டு வருகிறது. அவற்றுள், 2023–2024–ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இரண்டு



இளம்புழுவளர்ப்பு மையங்களுக்கு ரூ.19.50 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### 7.6. சிறு மற்றும் நடுத்தர அளவிலான பட்டு நூற்பு அலகுகள் நிறுவிட உதவியளித்தல்

#### 7.6.1. மோட்டார் சர்க்கா பட்டு நூற்பு அலகுகள்

பாரம்பரியம் மற்றும் புதுமை என இரண்டையும் பிரதிபலிக்கும் மோட்டார் சர்க்காவானது, தற்போதைய உற்பத்தித் தேவைகளுக்கு ஏற்புடையதாக இருப்பதால் அது பட்டு நூற்பாளர்களை தொடர்ந்து பட்டு நூற்புச் செயல்பாடுகளில் ஈடுபடச்செய்கிறது. மாநிலத்தில் 16 சர்க்கா பட்டு நூற்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. பட்டு நூற்பாளர்கள் மோட்டார் சர்க்கா அலகுகளை நிறுவும்போது குறைபாடுடைய பட்டுக்கூடுகளையும் பட்டுநூற்புக்குப் பயன்படுத்தி கூடுதல் வருவாய் பெற முடியும். ஆகவே, மோட்டார் சர்க்கா பட்டு நூற்பு அலகுகள் அமைக்க உதவியளிக்கப்படுகிறது.

#### 7.6.2. காட்டேஜ் பேசின் பட்டு நூற்பு அலகுகள்

மாநிலத்தில் செயல்பட்டுவரும் பட்டு நூற்பு அலகுகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமாக காட்டேஜ் பேசின் பட்டு நூற்பு அலகுகளே செயல்பட்டு

வருகின்றன. பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் பழமையான இந்த பட்டு நூற்பு அலகுகள் உற்பத்தித்திறனில் எவ்வித முன்னேற்றமுமின்றி செயல்பட்டு வருகின்றன. செயலிழந்த நூற்பு இயந்திரங்களை மாற்றுதல் / தரம் உயர்த்துதல் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியும். தற்போதுள்ள அலகுகளை மேம்படுத்தி அவற்றின் தரம் மற்றும் உற்பத்தித்திறனை உயர்த்திட, கூடுதல் உபகரணங்கள் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

### 7.6.3. பலமுனை பட்டு நூற்பு அலகுகள்

பலமுனை பட்டு நூற்பு அலகுகள் பாரம்பரிய பட்டு நூற்பு தொழில்நுட்பங்கள் நவீனமயமாக்கப்பட்டதைக் குறிக்கின்றன. இவை குறைந்தபட்ச தொழிலாளர் தேவையுடன் பல்வேறு வகையான பட்டுக்கூடுகளை நூற்கும் வண்ணம் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்டுள்ளன. இந்த பட்டு நூற்பு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பட்டினை நவீன விசைத்தறிகளிலும் பயன்படுத்த முடிகிறது. ஆகவே, சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர்கள் பலமுனை பட்டு நூற்பு அலகுகள் நிறுவிட உதவியளிக்கப்படுகிறது. மாநிலத்தில் 51 பலமுனை பட்டு நூற்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள், 2012–2013–ஆம் ஆண்டு முதல் நிறுவப்பட்ட 39 பலமுனை பட்டு நூற்பு அலகுகளுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

### 7.7. தானியங்கி பட்டு நூற்பு அலகுகள்

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வெண்பட்டுக்கூடுகளில் இருந்து சர்வதேச தரத்திலான கச்சாப் பட்டு தயாரிக்கும் வகையில் தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த தானியங்கி பட்டு நூற்பு இயந்திரங்கள் பாரம்பரிய பட்டு நூற்பு முறைகளை விட பல்வேறு பயன்பாட்டினை கொண்டுள்ளன. அவற்றுள் அதிக செயல்திறன் மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவையும் அடங்கும். பட்டு நூற்பு செயல்முறையை தானியக்கமாக்குவதன் மூலம், பட்டு நூற்பாளர்கள் அதிக அளவிலான உயர்தர பட்டு நூலை விரைவாகவும் குறைந்த செலவிலும் உற்பத்தி செய்ய முடியும். இத்திட்ட இனத்தின் கீழ் 200 முனைகள் மற்றும் 400 முனைகள் கொண்ட உள்நாட்டு தானியங்கி பட்டு நூற்பு அலகுகள் நிறுவிட உதவிகள் வழங்கப்படுகிறது. 2023–2024–ஆம் ஆண்டில்

2000 முனைகள் கொண்ட உள்நாட்டு தானியங்கி பட்டு நூற்பு அலகு நிறுவிட ரூ.299.00 இலட்சம் நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

**7.8 பரிசுகளும் வெகுமதிகளும்**

**7.8.1. மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப்பரிசு வழங்குதல்**

வெண்பட்டு விவசாயிகளிடையே பட்டுக்கூடு உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை ஊக்குவிக்கும் வகையில், மாநில அளவில் சிறந்த மூன்று பட்டு விவசாயிகளுக்கு ரொக்கப் பரிசுகள் 2017–2018–ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. 2023–2024–ஆம் ஆண்டில் மூன்று சிறந்த பட்டு விவசாயிகளுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.1,00,000/–, ரூ.75,000/– மற்றும் ரூ.50,000/– வழங்கப்பட்டுள்ளது.

**7.8.2. மாநில அளவில் சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு ரொக்கப்பரிசு வழங்குதல்**

விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் விதைக்கூடுகள் தரமான பட்டு முட்டைகளை உற்பத்தி செய்ய அரசு வித்தகங்களுக்கு



அனுப்பப்படுகிறது. தரமான விதைக்கூடு உற்பத்தி செய்து வழங்குவதை ஊக்குவிக்க 2023–2024–ஆம் ஆண்டு முதல் சிறந்த விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்க தீர்மானிக்கப்பட்டு, சிறந்த மூன்று விதைக்கூடு உற்பத்தியாளர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.1,00,000/–, ரூ.75,000/– மற்றும் ரூ.50,000/– வழங்கப்பட்டுள்ளது.

**7.8.3. மாநில அளவில் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்களுக்கு ரொக்கப்பரிசு வழங்குதல்**

தரமான கச்சாப்பட்டு உற்பத்தியை ஊக்குவிக்கவும், அரசு பட்டுப் பரிமாற்றகங்களில் கச்சாப் பட்டு பரிவர்த்தனையை அதிகரிக்கச் செய்யவும், மாநில அளவில் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்களுக்கு 2020–2021–ஆம் ஆண்டு முதல் ரொக்கப்பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது. 2023–2024–ஆம் ஆண்டில் மாநில அளவில் சிறந்த மூன்று பலமுனை பட்டு நூற்பாளர்கள் மற்றும் சிறந்த மூன்று தானியங்கி பட்டு நூற்பாளர்களுக்கு முதல்,

இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசாக முறையே ரூ.1,00,000/–, ரூ.75,000/– மற்றும் ரூ.50,000/– வழங்கப்பட்டுள்ளது.

**8. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்**

தமிழ்நாட்டில் புதுமையை ஊக்குவிக்கும் வகையில் அரசுத் துறைகளில் புதுமைகளை ஊக்குவித்திட "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்" மாநில திட்டக்குழுவால் உருவாக்கப்பட்டது. புதுமைகளை ஊக்குவிக்கவும், தரமான திட்டங்களுக்கு மட்டும் போதிய நிதி வழங்கிடவும் நடைமுறையிலிருந்த பகுதி II திட்டங்கள் அரசினால் மறுவரையறுக்கப்பட்டு 2015–2016–ஆம் ஆண்டு முதல் மாநில புத்தமைப்பு நிதி உருவாக்கப்பட்டது.

இலாபகரமான வாழ்வாதாரத்தை வழங்கும் பட்டுவளர்ப்புத் தொழிலை தொகுப்பு முறையில் ஊக்குவித்திட, "தொகுப்பு அணுகுமுறையில் மாதிரி பட்டுவளர்ப்பு கிராமம் உருவாக்குதல்" என்ற திட்டத்தினை ஈரோடு மாவட்டத்தில் ரூ.389.150 இலட்சம் மதிப்பில் 2023–2024–ஆம் ஆண்டு தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் செயல்படுத்திட அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.



பட்டுவளர்ப்புத் தொழிலின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கு தொகுப்பு அணுகுமுறை முக்கியமானதாகும். புதிய தொழில்நுட்பங்களை பரிமாற்றம் செய்து பயன்படுத்துதல், உகந்த முறையில் வளங்களை பயன்படுத்தச் செய்தல், சந்தை இணைப்பு மற்றும் அறுவடை பாதிப்புகளை குறைத்தல் முதலியவற்றை தொகுப்பு அணுகுமுறையில் எளிதாக மேற்கொள்ள முடியும்.

இத்திட்டம் தற்போது சோதனை முயற்சியாக கோபிசெட்டிபாளையம் மற்றும் நம்பியூர் வட்டாரங்களில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 80 புதிய பட்டு விவசாயிகளுக்கு மல்பெரி நடவு செய்தல் (120 ஏக்கர்), பட்டுப்புழு வளர்ப்பு மனை அமைத்தல், புழுவளர்ப்பு உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள், நோய்த்தடுப்பு மருந்துகள் கொள்முதல் செய்தல் மற்றும் பயற்சி வழங்குதல் ஆகிய இனங்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. விவசாயிகளுக்கு தேவைப்படும் மல்பெரி நாற்றுகளை தரமான முறையில் வழங்கிட விவசாயிகள் தோட்டங்களில் 6 ஏக்கரில் மல்பெரி நாற்று உற்பத்தி செய்யப்படும்.

இத்தொகுப்பிலுள்ள பட்டு விவசாயிகளுக்கு இளம்புழுக்களை வழங்கிட ஒரு இளம்புழு வளர்ப்பு மையம் அமைக்கப்படும். இத்தொகுப்பில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளை கச்சாப் பட்டாகவும் முறுக்கேற்றிய பட்டாகவும் மாற்றிட ஒரு பலமுனை பட்டு நூற்பாலை மற்றும் ஒரு பட்டு முறுக்கேற்றும் ஆலை அமைக்கப்படும்.

தொகுப்பு அணுகுமுறையானது பட்டு சார்ந்த தொழில்களான நெசவு, சாயமேற்றுதல் மற்றும் ஆடை உற்பத்தி போன்றவை அத்தொகுப்பைச் சுற்றி உருவாக வழிவகுக்கும். இந்த மாதிரித் திட்டமானது விவசாயிகள் பட்டுக்கூடு உற்பத்தி செய்வது முதல் பட்டுநூல் உற்பத்தி வரையிலான பட்டு வியாபாரத்தின் மொத்த மதிப்புச் சங்கிலியினை உள்ளடக்கியுள்ளதால் இந்த தொகுப்பு கிராமங்கள் வருங்காலத்தில் பட்டு மையங்களாக உருவாக வாய்ப்புள்ளது.

## 9. பட்டுவளர்ச்சித் துறையால் வழங்கப்படும் முக்கிய சேவைகள்

தமிழ்நாட்டில் பட்டுத்தொழில் மேம்பாட்டிற்காக விதை உற்பத்தி, பட்டுக்கூட்டிற்கு முந்தைய மற்றும்



பிந்தைய பிரிவுகளில் பின்வரும் முக்கிய சேவைகளை பட்டுவளர்ச்சித் துறை வழங்கி வருகிறது:

- ❖ அரசு வித்தகங்களில் தரமான மற்றும் நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகளை உற்பத்தி செய்து பட்டு விவசாயிகளுக்கு வழங்குதல்.
- ❖ தரமான விதைக்கூடு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உதவியளித்தல்
- ❖ அரசு பட்டுப்பண்ணைகளில் தரமான மல்பெரி நாற்றுகள் உற்பத்தி செய்து மலிவான விலையில் விவசாயிகளுக்கு வழங்குதல்
- ❖ அரசு பட்டுப்பண்ணைகளில் தரமான இளம்புழுக்கள் வளர்ப்பு செய்து வழங்குதல்
- ❖ மல்பெரி நடவு மற்றும் பட்டுப்புழுவளர்ப்பு மேற்கொண்டு தரமான பட்டுக்கூடு உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு திட்ட உதவிகள் வழங்குதல்.

- ❖ தரமான பட்டுநூல் உற்பத்தி செய்ய பட்டு நூற்பு அலகுகள் மற்றும் பட்டு முறுக்கேற்றும் அலகுகள் நிறுவிடும் தொழில்முனைவோர்களுக்கு திட்ட உதவிகள் வழங்குதல்.
- ❖ மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் உற்பத்தி செலவினங்களைக் குறைத்து தரமான பட்டுக்கூடுகள் மற்றும் கச்சாப் பட்டுநூலின் உற்பத்தித் திறனை அதிகரிக்க பங்குதாரர்களை ஊக்குவித்தல்.
- ❖ மல்பெரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் பட்டுநூற்பு போன்ற செயல்பாடுகளில் திறன் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வழிகாட்டுதல் வழங்குதல்.
- ❖ முன்னோடி பட்டு விவசாயிகளை ஈடுபடுத்தி தொகுப்பு அளவிலுள்ள புதிய பட்டு விவசாயிகளுக்கு பயிற்சி வழங்குதல்



- ❖ அரசு பட்டுக்கூடு அங்காடிகள் மற்றும் அரசு பட்டுப் பரிமாற்றகங்கள் மூலம் பட்டுக்கூடு மற்றும் கச்சாப்பட்டு நூலுக்கான ஒழுங்கு முறை சந்தை வசதிகளை ஏற்படுத்துதல்.
- ❖ பட்டுப்புழு வளர்ப்புத் தோல்வி / இழப்பு மற்றும் புழுவளர்ப்பு மனை சேதம் ஆகியவற்றிலிருந்து விவசாயிகளுக்கு உதவியளிக்க பயிர்க்காப்பீடு திட்டம் செயல்படுத்துதல்.

**10. துறையின் பல்வேறு அலகுகள் மூலம் பட்டு விவசாயிகள் மற்றும் பட்டுநூற்பாளர்களுக்கு தேவையான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்பு வசதிகள் வழங்குதல்**

பட்டு உற்பத்தி விநியோகச் சங்கிலியானது பட்டுமுட்டை உற்பத்தி, மல்பெரி பயிர் சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொண்டு பட்டுக்கூடு உற்பத்தி செய்தல் மற்றும் பட்டுநூல் உற்பத்தி செய்தல் உள்ளிட்ட பல்வேறு நிலைகளை உள்ளடக்கியது. இந்த விநியோகச் சங்கிலியின் திறமையான மேலாண்மை பட்டு உற்பத்திக்கு மிகவும் இன்றியமையாதது. ஏனெனில், ஒவ்வொரு

நிலைக்கும் குறிப்பிட்ட நிபுணத்துவம், வளங்கள் மற்றும் பல்வேறு பங்குதாரர்களின் ஈடுபாடு ஆகியவை தேவைப்படுகிறது. எனவே, பட்டுவளர்ச்சித் துறை அதன் பல்வேறு அலகுகள் மூலம் பங்குதாரர்களுக்கு தேவையான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்பு வசதிகளை வழங்கி வருகிறது:

## 10.1. பட்டுப்புழு விதைப் பண்ணைகள்

பட்டுப்புழு விதைப் பண்ணைகள் பட்டுப்புழு (பெற்றோர்) இனங்களை வளர்த்து வர்த்தக ரீதியிலான பட்டு முட்டை (விதை) உற்பத்திக்குத் தேவையான விதைக்கூடுகள் (பெற்றோர்) உற்பத்தி செய்யும் பணிகளை மேற்கொள்கின்றன.

பட்டுப்புழுக்களின் இனப் பண்புகளையும் கலப்பின வீரியத்தையும் பல தலைமுறைகளுக்கு பராமரிப்பதில் விதைப்பண்ணைகள் மற்றும் வித்தகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இது பட்டுப்புழு விதைப் பெருக்கத்தில் இன்றியமையாததாகும்.

பட்டுப்புழு விதை உற்பத்தியில் மூன்றடுக்கு முறையில் (பி3 –> பி2–> பி1) பட்டுப்புழுக்களின் இனப் பண்புகளை பராமரிப்பதற்கென துறையின் கீழ்



19 பட்டு விதைப்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன.

பி1 அளவில் தொடர்ந்து அதிகரித்துவரும் பட்டுமுட்டைகளின் தேவையை பூர்த்தி செய்திட, விதைப் பண்ணைகள் மட்டுமல்லாது தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகள் மூலமும் விதைக்கூடு உற்பத்தி செய்யப்படுகிறது.

**பட்டுப்புழு விதைப் பண்ணைகள்**

| மாவட்டம் | வ. எண் | விதைப் பண்ணையின் பெயர் | பணி | மொத்த பரப்பு |
|---|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | 1 | பேரிகை | பி3 | 3.67 |
| | 2 | ஆவலப்பள்ளி | பி3 | 11.34 |
| | 3 | ஓசூர் | பி2 | 44.72 |
| | 4 | கலுக்கொண்டப்பள்ளி | பி3 | 5.65 |
| | 5 | தளி | பி3 | 10.75 |
| | 6 | உத்தனப்பள்ளி | பி2 | 19.00 |
| | 7 | உளிமங்கலம் | பி2 | 9.80 |
| | 8 | மேலகிரி | பி2 | 10.20 |
| | 9 | கோலட்டி | பி1 | 868.55 |
| தருமபுரி | 10 | சித்தேரி | பி1 | 5.79 |
| ஈரோடு | 11 | ஆசனூர் | பி2 | 8.89 |
| | 12 | மாதஹள்ளி | பி1 | 785.29 |
| நீலகிரி | 13 | குன்னூர் | பி3 | 23.61 |
| | 14 | மசினகுடி | பி2 | 8.35 |
| | 15 | மசக்கல் | பி2 | 18.95 |
| திருப்பத்தூர் | 16 | அத்தனாவூர் | பி1 | 5.73 |
| நாமக்கல் | 17 | கொல்லிமலை | பி1 | 13.10 |

| மாவட்டம் | வ. எண் | விதைப் பண்ணையின் பெயர் | பணி | மொத்த பரப்பு |
|---|---|---|---|---|
| தேனி | 18 | மயிலாடும்பாறை | பி2 | 10.50 |
| தென்காசி | 19 | செங்கோட்டை | பி1 | 42.24 |
| | | மொத்தம் | | 1906.13 |

### 10.2. வித்தகங்கள்

விதைக் கூடுகளிலிருந்து வர்த்தக ரீதியிலான நோயற்ற பட்டு முட்டைத் தொகுதிகளை உற்பத்தி செய்யும் மையங்கள் 'வித்தகங்கள்' என அழைக்கப்படுகிறது.

விதைப் பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி விவசாயிகளிடமிருந்து பெறப்படும் விதைக் கூடுகள் வெட்டப்பட்டு கூட்டுப்புழுக்கள் தனியே எடுத்து இனம் பிரிக்கப்படுகிறது. கூட்டுப்புழுவிலிருந்து அந்துப்பூச்சி வெளிவந்த பிறகு ஆண் மற்றும் பெண் பூச்சிகள் இணைய அனுமதிக்கப்படுகிறது, பின்னர் தாய்ப்பூச்சிகள் முட்டையிடுகின்றன (எஃப்1 தலைமுறை). இந்த இரு சுழற்சியின பட்டு முட்டைகள் குளிர்பதனம் செய்யப்பட்டு ஆண்டு முழுவதும் பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.



ஓர் ஆண்டிற்கான மாநிலத்தின் மொத்த பட்டுமுட்டைத் தேவை 200 இலட்சம் பட்டு முட்டைத் தொகுதிகள் என மதிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள் 100 இலட்சம் பட்டு முட்டைத் தொகுதிகள் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பத்து அரசு வித்தகங்கள் மற்றும் 2023–2024–ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தனியார் பட்டு முட்டை உற்பத்தி மையத்தின் மூலமாக மாநிலத்திலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

மத்திய பட்டு வாரியத்தின் கீழ் இயங்கும் தேசிய பட்டுப்புழு விதைக் கழகத்தின் (National Silkworm Seed Organisation) 2 வித்தகங்களும் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

இது தவிர, 2023–2024–ஆம் ஆண்டில் திருப்பத்தூர் மாவட்டத்தில் அமைந்துள்ள ஆண்டுக்கு 20 லட்சம் பட்டு முட்டைத் தொகுதிகள் உற்பத்தித் திறன் கொண்ட மத்திய பட்டு வாரியத்தின் பட்டுப்புழு விதை உற்பத்தி மையம் ஒன்று, "அடிப்படையில் இருந்தபடியே" என்ற முறையில் வாடகை இல்லாமல் மாநில பட்டுவளர்ச்சித் துறையால் பத்து ஆண்டுகளுக்குக் குத்தகைக்குப் பெறப்பட்டு

அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்தாகியுள்ளது.

இந்த வித்தகத்தில் நடப்பாண்டில் பட்டுமுட்டை உற்பத்தி தொடங்கிட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் இறுதியில் மாநிலத்தின் பட்டு முட்டை உற்பத்தித் திறன் 120 இலட்சம் வரை உயர்த்தப்படும்.

கடந்த ஆண்டில் அரசு வித்தகங்களின் பட்டுமுட்டை உற்பத்தித் திறன் 60 இலட்சத்திலிருந்து 70 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மாநிலத்தின் பட்டு முட்டை உற்பத்தி திறனை அதிகரிக்க தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

2023-2024-ஆம் ஆண்டில், 10 அரசு வித்தகங்களில் 68.61 இலட்சம் பட்டு முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**2023-2024-ஆம் ஆண்டில்**
**அரசு வித்தகங்களில் பட்டுமுட்டை உற்பத்தி**

| மாவட்டம் | வ. எண். | வித்தகத்தின்பெயர் | முட்டைத் தொகுதிகள் உற்பத்தி (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | 1 | ஓசூர் | 10.10 |
| | 2 | கிருஷ்ணகிரி | 24.88 |
| தருமபுரி | 3 | சோகத்தூர் | 4.29 |
| | 4 | பென்னாகரம் | 3.09 |
| கோயம்புத்தூர் | 5 | கோயம்புத்தூர் | 4.73 |
| ஈரோடு | 6 | ஈரோடு | 6.06 |
| | 7 | தாளவாடி | 2.86 |
| திருப்பத்தூர் | 8 | வாணியம்பாடி | 7.47 |
| திருச்சிராப்பள்ளி | 9 | திருச்சிராப்பள்ளி | 1.30 |
| தென்காசி | 10 | குற்றாலம் | 3.83 |
| மொத்தம் | | | 68.61 |



## 10.3. பல்நிலை குளிர்பதன அலகுகள்

இரு சுழற்சி இன பட்டு முட்டைகள் இயற்கையாகவே விதை உறக்கத்திற்குச் செல்வதால் முட்டையிட்ட நாளிலிருந்து சுமார் 6-10 மாதங்கள் கழித்து முட்டைத் தொகுதிகள் பொரிக்கின்றன. எனவே, இரு சுழற்சியின பட்டுமுட்டைகளின் விதை உறக்கத்தைப் போக்கி சீரான முட்டை பொரிப்பிற்கு குளிர்பதன அறையில் 120 நாட்கள் முதல் 300 நாட்கள் வரையில் 2.5° செல்சியஸ் முதல் 25° செல்சியஸ் வரையிலான வெவ்வேறு வெப்ப நிலைகளில், நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு பாதுகாப்பாக குளிர்பதனம் செய்வது அத்தியாவசியமாகிறது.

வெற்றிகரமான பட்டுக்கூடு அறுவடைக்கு பட்டு முட்டையினை முறையாக பாதுகாப்பது அத்தியாவசியமானதாகும். பட்டு முட்டையின் முறையற்ற பாதுகாப்பு, சீரான முட்டை பொரிப்பினை பாதிப்பதுடன் பட்டுப்புழுக்களின் ஆரோக்கியமான வளர்ச்சியினையும், தரமான பட்டுக்கூடு உற்பத்தியினையும் மட்டுப்படுத்துகின்றது.

மஞ்சள் பட்டுக் கூடுகளை விட வெண் பட்டுக்கூடுகளுக்கு அதிக விலை கிடைப்பதாலும், அதன் சிறந்த தரத்திற்கு வரவேற்பு அதிகமாக இருப்பதாலும், தமிழ்நாடு விவசாயிகள் வெண் பட்டுப்புழுக்களையே வளர்க்க அதிகம் விரும்புகின்றனர். எனவே, குளிர்பதன அலகுகள் மூலம் ஆண்டு முழுவதும் பட்டு விவசாயிகளுக்கு வெண்பட்டு முட்டைகள் துறையால் விநியோகம் செய்யப்படுகிறது.

இருசுழற்சியின பட்டு முட்டைகளை தேவைக்கேற்ப விவசாயிகளுக்கு விநியோகம் செய்வதற்காக கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் (ஆவலப்பள்ளி மற்றும் தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலைய வளாகம்) (கிருஷ்ணகிரி மாவட்டம்) மற்றும் சின்னவேடம்பட்டி (கோயம்புத்தூர் மாவட்டம்)



ஆகிய இடங்களில் 160 இலட்சம் பட்டு முட்டைகள் பதனம் செய்யும் திறன் கொண்ட நான்கு பல்நிலை குளிர்பதன அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

அவற்றுள், கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலைய வளாகத்தில் 100.00 இலட்சம் இரு சுழற்சியின பட்டு முட்டைகள் பதனப்படுத்தும் திறன் கொண்ட ஒரு பல்நிலை குளிர்பதன அலகு 2023–2024–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ளது.

**10.4. அரசு பட்டுப் பண்ணைகள்**

இத்துறையின் கீழ் 31 அரசு பட்டுப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த அரசு பட்டுப் பண்ணைகள் பல்வேறு பட்டுவளர்ச்சி செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன. அவை,

- தரமான மல்பெரி நாற்றுகள் உற்பத்தி செய்தல் மற்றும் நியாயமான விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்தல்.
- தரமான இளம்புழுக்களை (2–ஆம் பருவம் வரையிலான இளம்

பட்டுப்புழுக்கள்) வளர்த்தல் மற்றும் விநியோகம் செய்தல்.

- பட்டுப்புழுவளர்ப்பு செயல்பாடுகள்.
- நவீன பட்டுப்புழு வளர்ப்புத் தொழில்நுட்பங்கள் குறித்து செயல்விளக்கம் அளித்தல்.
- பட்டு விவசாயிகளுக்கு செயல்முறைப் பயிற்சி வழங்குதல்.
- பிரபலமான மற்றும் பாரம்பரிய மல்பெரி இரகங்களின் ஜெர்ம்பிளாசம் பராமரித்தல்.
- மத்திய பட்டு வாரியத்தால் புதிதாக வெளியிடப்பட்ட மல்பெரி இரகங்களை கள சோதனைகள் நடத்துதல்.
- மத்திய பட்டு வாரியத்தால் புதிதாக வெளியிடப்பட்ட பட்டுப்புழு இனங்களின் கள புழுவளர்ப்புகள் நடத்துதல்.
- ஆராய்ச்சி மாணவர்களுக்கு பல்வேறு பட்டுப்புழு வளர்ப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வைப் பெறுவதற்கான தளத்தை வழங்குதல்.



அரசு பட்டுப் பண்ணைகள் அவற்றின் செயல்பாடுகளுக்கேற்ப அரசு கலப்பின பட்டுப்பண்ணைகள், செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையங்கள், விவசாயிகள் பயிற்சி மையங்கள், இளம்புழு வளர்ப்புப் பண்ணைகள் மற்றும் மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணைகள் என வகைப்படுத்தப்படுகின்றன.

**அரசு பட்டுப் பண்ணைகள்**

| மாவட்டம் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | மொத்த பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி | 1 | செயல் விளக்கம் மற்றும் பயிற்சி மையம், ஓசூர் | 2.18 |
| | 2 | கலப்பின பட்டுப் பண்ணை, ஊத்தங்கரை | 1.77 |
| தருமபுரி | 3 | விவசாயிகள் பயிற்சி மையம், சோகத்தூர் | 5.84 |
| | 4 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை, பாப்பாரப்பட்டி | 1.81 |
| சேலம் | 5 | விவசாயிகள் பயிற்சி மையம், நத்தக்கரை | 14.50 |
| | 6 | கலப்பின பட்டுப் பண்ணை, மணியார்குண்டம் | 2.50 |
| | 7 | கலப்பின பட்டுப் பண்ணை, புதூர் | 6.05 |
| கள்ளக்குறிச்சி | 8 | கலப்பின பட்டுப் பண்ணை, வெள்ளிமலை | 6.25 |

| மாவட்டம் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | மொத்த பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| ஈரோடு | 9 | விவசாயிகள் பயிற்சி மையம், தாளவாடி | 18.01 |
| | 10 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை இராமாபுரம் | 3.58 |
| | 11 | கலப்பின பட்டுப் பண்ணை, கீர்மாளம் | 32.82 |
| திருப்பூர் | 12 | விவசாயிகள் பயிற்சி மையம், மைவாடி | 20.10 |
| காஞ்சிபுரம் | 13 | விவசாயிகள் பயிற்சி மையம், விச்சந்தாங்கல் | 7.23 |
| திருப்பத்தூர் | 14 | விவசாயிகள் பயிற்சி மையம், மின்னூர் | 18.70 |
| திருவண்ணா மலை | 15 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை, நாடானூர் | 1.88 |
| திருப்பத்தூர் | 16 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை, புலியூர் | 7.99 |
| கடலூர் | 17 | விவசாயிகள் பயிற்சி மையம், நெய்வேலி | 20.00 |
| திருச்சிராப்பள்ளி | 18 | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், உப்பிலியாபுரம் | 15.30 |
| | 19 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, கலிங்கப்பட்டி | 5.00 |
| | 20 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, கருக்கமடை | 2.16 |
| | 21 | கலப்பின பட்டுப் பண்ணை, பச்சமலை | 8.45 |
| | 22 | விவசாயிகள் பயிற்சி மையம், மணிகண்டம் | 10.00 |
| தஞ்சாவூர் | 23 | விவசாயிகள் பயிற்சி மையம், நாஞ்சிக்கோட்டை | 4.65 |
| திண்டுக்கல் | 24 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, சி.கே.புதூர் | 4.93 |



| மாவட்டம் | வ. எண். | அரசு பட்டுப் பண்ணையின் பெயர் | மொத்த பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| சிவகங்கை | 25 | இளம்புழு வளர்ப்புப் பண்ணை, நாகம்பட்டி | 3.51 |
| | 26 | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், ஓ.புதூர் | 10.00 |
| இராமநாதபுரம் | 27 | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், பாண்டியூர் | 4.62 |
| திருநெல்வேலி | 28 | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், திருநெல்வேலி (இருப்பு) வி.எம்.சத்திரம் | 1.88 |
| விருதுநகர் | 29 | விவசாயிகள் பயிற்சி மையம், திருவில்லிபுத்தூர் | 10.15 |
| | 30 | மாதிரி மல்பெரி பட்டுப் பண்ணை, செவலூர் | 12.00 |
| கன்னியாகுமரி | 31 | செயல்விளக்கம் மற்றும் பயிற்சி மையம், கோணம் | 3.10 |
| | | **மொத்தம்** | **264.51** |

அரசு பட்டுப் பண்ணைகளின் வளங்களை திறம்பட பயன்படுத்தி அவற்றின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வகையில், 2024–2025–ஆம் ஆண்டில் நான்கு முதல் ஐந்து நடுத்தர மற்றும் பெரிய அளவிலான பட்டுப் பண்ணைகளின் மூலம் மாநிலத்தின் ஓர் ஆண்டிற்கான மல்பெரி நாற்றுகள் தேவையைப் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

### 10.4.1. பட்டு உலகம் – பட்டு சுற்றுலா மையம், ஏற்காடு

2015–2016–ஆம் ஆண்டில் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.250.00 இலட்சம் மதிப்பில், சுற்றுலா மேம்பாடு மற்றும் சுற்றுலாப் பயணிகளிடையே பட்டுத்தொழில் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் என்ற இரட்டைக் குறிக்கோள்களுடன் ஏற்காட்டில் உள்ள அரசு பட்டுப் பண்ணையில், அதிநவீன பட்டு சுற்றுலா மையம் – 'பட்டு உலகம்' நிறுவப்பட்டது.

இந்த பட்டு சுற்றுலா மையம், விவசாய பெருமக்களிடையே பட்டுப்புழுவளர்ப்பை மேற்கொள்வதற்கும், இளம் தலைமுறையினர் பட்டுநூற்பு, பட்டு முறுக்கேற்றுதல் மற்றும் பட்டு நெசவு தொழில்கள் போன்ற பண்ணை சாரா தொழில்களில் ஈடுபடுவதற்கும் போதுமான தொழில்நுட்ப தகவல்களை பரப்புகிறது. இம்மையத்தில் வைக்கப்பட்டுள்ள அறிவியல் உபகரணங்கள் மாணவர்கள் பெரிதும் ரசிக்கும் வண்ணம் அமைந்துள்ளது. மாணவர்களிடையே பட்டுத்தொழில் குறித்த அறிவை வளர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ளதால், பள்ளி மற்றும் கல்லூரிகளை ஈர்க்கும் இடமாக இந்த மையம் திகழ்கிறது.



இந்த பட்டு சுற்றுலா மையம் பல சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருவதுடன் பட்டுவளர்ப்பு செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வை உருவாக்க மிகவும் பயனுள்ளதாகவும் சுற்றுலாப் பயணிகளுக்கு சிறந்த பொழுதுபோக்கு இடமாகவும் செயல்படுகிறது. மேலும், இது குழந்தைகளிடையே அறிவியல் அறிவை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### 10.5. தொழில்நுட்ப சேவை மையங்கள்

பட்டுப்புழுக்கள் எளிதாக பூச்சிகள் மற்றும் நோய்த்தாக்குதலுக்கு உட்படுவதால் பட்டுப்புழு வளர்ப்புக்கு கூடுதல் தொழில்நுட்ப அறிவு தேவைப்படுகிறது. எனவே, பட்டுக்கூடுகளை அறுவடை செய்யும் வரை நாள்தோறும் பராமரிப்பு அவசியமாகிறது.

தொழில்நுட்ப சேவை மையங்கள் விவசாயிகளுடன் நேரடி தொடர்பு கொண்ட அடிப்படை அளவிலான விரிவாக்க மையங்களாவும், பட்டு விவசாயிகளுக்கு மல்பெரி சாகுபடி, தோட்ட பராமரிப்பு, பட்டுப்புழுவளர்ப்பு மற்றும் பயிர்ப் பாதுகாப்பு

போன்றவற்றில் அவர்களின் இல்லத்திற்கே சென்று தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் மையங்களாகவும் செயல்படுகின்றன.

பட்டுப்புழுவளர்ப்பு மேற்கொள்ள புதிய விவசாயிகளை மல்பெரி சாகுபடிக்கு கொண்டு வருவதன் மூலம் மாநிலத்தில் மல்பெரி பரப்பளவை விரிவாக்குவதில் இவை ஈடுபடுகின்றன. மேலும், இத்தொழில்நுட்ப சேவை மையங்கள் விவசாயிகளுக்கு பட்டு வளர்ச்சித் துறையின் பல்வேறு நலத்திட்டங்களின் மூலம் வழங்கப்படும் பயன்களைப் பெறவும் உதவுகின்றன. 102 தொழில்நுட்ப சேவை மையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன.

**தொழில்நுட்ப சேவை மையங்கள்**

| வ. எண் | மாவட்டம் | தொழில்நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கிருஷ்ணகிரி | 15 |
| 2 | தருமபுரி | 10 |
| 3 | சேலம் | 6 |
| 4 | கோயம்புத்தூர் | 5 |
| 5 | திருப்பூர் | 7 |
| 6 | ஈரோடு | 7 |
| 7 | நீலகிரி | 1 |



| வ. எண் | மாவட்டம் | தொழில்நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 8 | வேலூர் | 2 |
| 9 | திருப்பத்தூர் | 5 |
| 10 | இராணிப்பேட்டை | 1 |
| 11 | காஞ்சிபுரம் | |
| 12 | செங்கல்பட்டு | 1 |
| 13 | திருவள்ளூர் | |
| 14 | திருவண்ணாமலை | 5 |
| 15 | நாமக்கல் | 6 |
| 16 | கரூர் | 1 |
| 17 | திருச்சிராப்பள்ளி | 3 |
| 18 | பெரம்பலூர் | 1 |
| 19 | அரியலூர் | |
| 20 | புதுக்கோட்டை | 2 |
| 21 | தஞ்சாவூர் | 1 |
| 22 | திருவாரூர் | |
| 23 | நாகப்பட்டினம் | 1 |
| 24 | மயிலாடுதுறை | |
| 25 | விழுப்புரம் | 2 |
| 26 | கள்ளக்குறிச்சி | 1 |
| 27 | கடலூர் | 1 |
| 28 | மதுரை | 1 |
| 29 | தேனி | 3 |
| 30 | விருதுநகர் | 1 |
| 31 | இராமநாதபுரம் | 1 |
| 32 | சிவகங்கை | 1 |
| 33 | திண்டுக்கல் | 5 |
| 34 | திருநெல்வேலி | 1 |
| 35 | தென்காசி | 3 |

| வ. எண் | மாவட்டம் | தொழில்நுட்ப சேவை மையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 36 | தூத்துக்குடி | 1 |
| 37 | கன்னியாகுமரி | 1 |
| | மொத்தம் | 102 |

**10.5.1. நீடித்த நிலையான பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு தொகுப்பு அணுகுமுறை**

துறை உருவாக்கப்பட்டதில் இருந்து அதன் குறிக்கோளை எய்திட மல்பெரி சாகுபடிப் பரப்பை விரிவாக்குதல், திறன் கட்டமைப்பிற்குத் தேவையான தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிகள் வழங்குதல், பட்டுப்புழுவளர்ப்பிற்கான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல் மற்றும் பண்ணை இயந்திரமயமாக்கல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

இக்குறிக்கோளை நோக்கிப் பயணிக்க துறையால் எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளில், துறையின் நீடித்த நிலையான வளர்ச்சிக்கு "தொகுப்பு அணுகுமுறை" காலத்தின் தேவையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.



பட்டுப்புழுவளர்ப்பில் முதன்மைப் பொருளாக உள்ள பட்டுக்கூடுகள், பட்டு நூற்புத் தொழிலுக்கான கச்சாப் பொருளாக உள்ளன. ஒரு பட்டுநூற்பு அலகு முழுமையாக செயல்படத் தேவையான அனைத்து ஆதரவும் கிடைக்கும் வகையில் மல்பெரி நடவுப் பரப்பின் அடிப்படையில் பட்டுவளர்ப்பு தொகுப்புகள் வரையறுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதற்கேற்ப, ஒரு பட்டுவளர்ப்புத் தொகுப்பானது குறைந்தபட்சம் 80 ஏக்கர் முதல் அதிகபட்சமாக 120 ஏக்கர் வரை மல்பெரி நடவு செய்யப்பட்ட பகுதியாக வரையறுக்கப்படுகிறது. பட்டு விவசாயிகளுக்கு தேவைப்படும் முழுமையான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்பு வசதிகளை வழங்கும் வகையில் பட்டுவளர்ப்புத் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

ஒரு தொகுப்பில் பின்வரும் வசதிகள் இருத்தல் வேண்டும்:

1. ஒரு குளிர்பதன அலகு (பட்டு முட்டை விநியோகம் செய்யும் இடம்)
2. ஒரு இளம்புழுவளர்ப்பு மையம்

3. 80 ஏக்கர் முதல் 120 ஏக்கர் வரையிலான மல்பெரி பரப்பு

4. ஒரு பட்டுநூற்பு அலகு

2023–2024–ஆம் ஆண்டில், குறைந்தபட்சம் 80 ஏக்கர் முதல் அதிகபட்சமாக 120 ஏக்கர் வரை மல்பெரி நடவு செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையைப் பூர்த்தி செய்த 83 பகுதிகள் பட்டுவளர்ப்பு தொகுப்புகளாக உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 2024–2025–ஆம் ஆண்டில் பட்டுவளர்ப்பு தொகுப்புகளாக உருவாக்கப்பட வாய்ப்புள்ள 47 பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. தொகுப்புகளில் பட்டு விவசாயிகளுக்கு தேவைப்படும் முழுமையான முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்பு வசதிகளை வழங்க துறையால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

**10.6. அரசு பட்டுக்கூடு அங்காடிகள்**

அரசு பட்டுக்கூடு அங்காடிகள், ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக செயல்பட்டு, இடைத்தரகர்களை நீக்கி, விவசாயிகள் தங்களது பட்டுக்கூடுகளை விற்பனை செய்திடவும், பட்டுநூற்பாளர்கள் தங்களது மூலப் பொருளை



வாங்குவதற்குமான சந்தை வசதிகளையும் வழங்குகிறது.

தர பகுப்பாய்வின் அடிப்படையில் பட்டுக் கூடுகளுக்கு ஏலத்திற்கான அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இது விற்பனைப் பொருளுக்கான தரத்தையும் நியாயமான விலை கிடைப்பதையும் உறுதிசெய்கிறது. பட்டுக்கூடுகளின் விற்பனை மதிப்பில் தலா 0.75 சதவீதம் தீர்வை (levy) விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

மாநிலம் முழுவதும் ஓசூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு, தாளவாடி, உடுமலைப்பேட்டை (மைவாடி), வாணியம்பாடி, திருவண்ணாமலை, திருச்சி, இராசிபுரம், சிவகங்கை, தேனி, நன்னகரம், திருவில்லிப்புத்தூர் மற்றும் நாகர்கோவில் உள்ளிட்ட 17 இடங்களில் அரசு பட்டுக்கூடு அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

விதைக்கூடுகள் பரிவர்த்தனை மேற்கொள்ள ஆவலப்பள்ளி(ஓசூர்)யில் ஒரு விதைக்கூடு அங்காடி செயல்பட்டு வருகிறது.

அனைத்து பட்டுக்கூடு அங்காடிகளிலும் மின்னணு ஏல முறையை செயல்படுத்திட ஒரு பிரத்யேக மென்பொருள் உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

**10.7. அரசு பட்டு நூற்பு / முறுக்கேற்றும் அலகுகள்**

பட்டுத் தொழிலின் முக்கிய பிரிவான பட்டுக் கூடுகளுக்கு பிந்தைய பிரிவிற்கு துணைபுரிவதற்காக, பட்டுநூற்பு மற்றும் பட்டு முறுக்கேற்றும் தொழில்முனைவோர்களுக்கான மாதிரி அலகுகளாக அரசு பலமுனை பட்டுநூற்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் ஓசூர், சேலம், தாளவாடி, வாணியம்பாடி, புதுக்கோட்டை, சிவகங்கை, நன்னகரம் மற்றும் நாகர்கோவில் (கோணம்) ஆகிய 8 இடங்களில் அரசு பட்டு நூற்பு அலகுகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள் ஓசூர், சேலம், தாளவாடி மற்றும் நன்னகரம் ஆகியவை பட்டு நூற்பு (ம) பட்டு முறுக்கேற்றும் அலகுகளாக செயல்பட்டு வருகின்றன. இங்கு கச்சாப்பட்டு நூல் முறுக்கேற்றிய பட்டு நூலாக மதிப்புக் கூட்டப்படுகிறது. இந்த பட்டு நூற்பு அலகுகள் ஆண்டொன்றிற்கு 24 மெட்ரிக் டன்



கச்சாப்பட்டினை உற்பத்தி செய்யும் திறன் கொண்டவையாகும்.

மாநிலத்தின் பட்டு நூற்புப் பிரிவை வலுப்படுத்துவதன் முக்கியத்துவம் கண்டறியப்பட்டு, மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன் புதிய பட்டு நூற்பு தொழில்முனைவோர்களை உருவாக்குவதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

2016–ஆம் ஆண்டு முதல் மாநிலத்தில் 27 பலமுனை பட்டு நூற்பு அலகுகளும், 400 முனைகள் கொண்ட 6 தானியங்கி பட்டு நூற்பு அலகுகளும், 200 முனைகள் கொண்ட 2 தானியங்கி பட்டுநூற்பு அலகுகளும், 142 முனைகள் கொண்ட ஒரு தானியங்கி டூபியான் பட்டுநூற்பு அலகும் நிறுவப்பட்டுள்ளது. இதன்மூலம் மாநிலத்தின் பட்டுநூல் உற்பத்தித் திறன் 25 சதவீதத்திலிருந்து 35 சதவீதமாக உயர்ந்துள்ளது.

மேலும், 400 முனைகள் கொண்ட 4 தானியங்கி பட்டுநூற்பு அலகுகளும், 200 முனைகள் கொண்ட 2 தானியங்கி பட்டுநூற்பு அலகுகளும், 2000 முனைகள் கொண்ட ஒரு தானியங்கி

பட்டுநூற்பு அலகும் நிறுவும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 10.8. அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம், காஞ்சிபுரம்

மாநிலத்தில் உள்ள பட்டு நூற்பாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பட்டுநூல் காஞ்சிபுரம் மற்றும் சேலத்தில் செயல்பட்டு வரும் அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகங்களில் பரிவர்த்தனை செய்யப்படுகிறது. அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தையாக செயல்பட்டு, பட்டு நூற்பாளர்கள் தங்களது உற்பத்திப் பொருளான கச்சாப்பட்டு நூலை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை வழங்குகிறது.

பட்டின் தரம் மற்றும் மாநிலத்தின் பட்டுக்கூடுகளின் விலைக்கேற்ப அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்டு கச்சாப் பட்டுநூல் ஏலம் விடப்படுகிறது. பெருநெசவாளர்கள், முறுக்காளர்கள் மற்றும் 'டான்சில்க்' போன்றோர், வெளிப்படையான ஏலத்தில் பங்கேற்று பட்டுநூலினை கொள்முதல் செய்கின்றனர். பட்டுநூலின் விற்பனை மதிப்பில் தலா



0.75 சதவீதம் தீர்வை (levy) விற்போர் மற்றும் வாங்குவோரிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

2023–2024–ஆம் ஆண்டில், அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் காஞ்சிபுரம் மற்றும் சேலம் கிளைகளில் 111.446 மெட்ரிக் டன் கச்சாப் பட்டுநூல் ரூ.4,330.583 இலட்சம் மதிப்பிற்கு பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது.

### 10.9. தமிழ்நாடு பட்டுவளர்ச்சி பயிற்சி நிலையம், ஓசூர்

பட்டுவளர்ச்சித் துறையின் களப் பணியாளர்களுக்கு புத்தாக்கப் பயிற்சியும், புதிய விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பாளர்களுக்கு பயிற்சியும் தொடர்ந்து வழங்கப்படுவதற்காக ஓசூரில் அனைத்து உட்கட்டமைப்பு மற்றும் உறைவிட வசதிகளுடன் கூடிய ஒரு பயிற்சி நிலையத்தினை பட்டுவளர்ச்சித் துறை கொண்டுள்ளது.

அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சி குறித்த விவரங்கள்:

1. சில்க் சமக்ராவின் பயனாளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நவீன

பட்டுப்புழுவளர்ப்புத் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி.

2. துறையில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கப் பயிற்சி.
3. "ஆத்மா" திட்டத்தின் கீழ் விவசாயிகள் பயிற்சி.
4. "ஆத்மா" திட்டத்தின் கீழ் அலுவலர்கள் பயிற்சி.

2023–2024–ஆம் ஆண்டில், 1606 விவசாயிகள் (துறையின் திட்டங்கள் – 1044 விவசாயிகள், ஆத்மா திட்டம் – 562 விவசாயிகள்) மற்றும் 66 துறைப் பணியாளர்களுக்கு இப்பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் 169 கல்லூரி மாணவர்கள் பட்டுத்தொழில் குறித்த ஒருநாள் கருத்துப்பட்டறையில் கலந்துக் கொண்டுள்ளனர்.

### 10.9.1. பட்டுமலர்

'பட்டுமலர்' எனும் மாதாந்திர தொழில்நுட்ப இதழ் தமிழ்நாடு பட்டு வளர்ச்சி பயிற்சி நிலையம் மூலம் அச்சிடப்பட்டு இதழ் ஒன்றிற்கு ரூ.2/– என்ற மானிய விலையில் பட்டு விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது. பட்டுத் தொழிலில்



காலத்திற்கேற்ப ஏற்பட்டுள்ள புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் மேம்பாடுகள் குறித்து பட்டு விவசாயிகள் அறிந்து கொள்ள இது துணைபுரிகிறது.

### 10.10. தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), காஞ்சிபுரம்

தமிழ்நாடு கூட்டுறவு பட்டு உற்பத்தியாளர் இணையம் (டான்சில்க்), தமிழ்நாட்டிலுள்ள பட்டு கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைக் கூட்டுறவு இணையமாக பதிவு செய்யப்பட்டு, காஞ்சிபுரத்தில் இயங்கிவருகிறது.

மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் கச்சாப் பட்டு மற்றும் ஆயத்த பட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் பட்டு வளர்ப்பு விவசாயிகள், பட்டு நூற்பாளர்கள், பட்டு முறுக்காளர்கள், நெசவாளர்கள் மற்றும் சர்வோதய சங்கங்களின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கத்திற்காக டான்சில்க் உருவாக்கப்பட்டது.

இதன் கிளைகள் ஆரணி, கோயம்புத்தூர், ஈரோடு, காஞ்சிபுரம், கும்பகோணம் மற்றும் சேலம் ஆகிய ஆறு இடங்களில் அமைந்துள்ளன. பட்டு

நூற்பாளர்கள், முறுக்காளர்கள், பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சர்வோதய சங்கங்கள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். அரசு அண்ணா பட்டு பரிமாற்றகத்திலிருந்து இவ்விணையம் கச்சாப் பட்டினை கொள்முதல் செய்து, பட்டு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், காதி மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களுக்கு விநியோகித்து வருகிறது.

டான்சில்க்கின் பட்டு கொள்முதல் திறனை அதிகரிக்கவும், கூட்டுறவு சங்கங்களைத் தவிர, மாநிலத்தில் உள்ள தேவையான பட்டு நெசவாளர்களுக்கு கச்சாப் பட்டு மற்றும் ஆயத்த பட்டுகளை வழங்கவும், கச்சாப் பட்டு மற்றும் ஆயத்த பட்டு விற்பனைக்காக மின்–வணிகத்தளம் ஒன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம்

- கச்சாப்பட்டு / ஆயத்த பட்டு விற்பனையில் வெளிப்படைத் தன்மையை கொண்டுவருதல்
- மாநிலத்தில் தரமான பட்டுக்கான தேவையை அதிகரித்தல்



- தனியார் நிறுவனங்களிலிருந்து தரமான கச்சாப் பட்டு பெறுவதற்கான வாய்ப்பினை விரிவுபடுத்துதல்.
- கைத்தறி நெசவாளர் சங்கங்கள் மற்றும் தனியார் பட்டு நெசவாளர்களுக்கு கச்சாப் பட்டு மற்றும் ஆயத்த பட்டுக்கு நியாயமான விலையை வழங்குதல்.
- டான்சில்க்கில் பட்டு இருப்பினை குறைத்து விற்பனையினை அதிகரித்தல்.

**11. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி**

அரசு பட்டுக்கூடு அங்காடிகள் மற்றும் பட்டுப் பரிமாற்றகங்களில் வசூலிக்கப்படும் லெவி தொகை "பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி" என்ற நிதியில் வரவு வைக்கப்படுகிறது. இந்த நிதியின் கீழ் முன்மொழியப்பட்ட மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க, அரசு முதன்மைச் செயலர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை தலைமையில் ஒரு குழுவை அரசு அமைத்துள்ளது.

அரசு வித்தகங்கள், பட்டுக்கூடு அங்காடிகள் மற்றும் பட்டுநூற்பு அலகுகளுக்கு சுழல் நிதி வழங்குதல், துறையின் பல்வேறு அலகுகளுக்குத் தேவையான தளவாடப் பொருட்கள் கொள்முதல் செய்தல், முன்னிணைப்பு மற்றும் பின்னிணைப்பு வசதிகள் வழங்கிடத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுக்கு உதவியளித்தல், பட்டுமலர் அச்சிடுதல் மற்றும் பட்டுப்புழு பயிர்க்காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்துதல் போன்ற முக்கிய மேம்பாட்டுத் திட்டங்கள் இந்நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

2024-2025-ஆம் ஆண்டில் "பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி"யிலிருந்து பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு ரூ.150.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**12. பட்டுப்புழுவளர்ப்பிற்கான காப்பீட்டுத் திட்டம்**

மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழுவளர்ப்பு என இரண்டையும் உள்ளடக்கியது பட்டுத்தொழில். பட்டுப்புழுக்கள் எளிதில் பூச்சி மற்றும் நோய்த்தாக்குதலுக்கு உட்படுகிறது. பட்டுப்புழுக்களுக்குத் தேவையான நுண்



தட்பவெப்பநிலைகளை பராமரிக்க ஏதுவாக தனி புழுவளர்ப்பு மனை அவசியமாகிறது. சிறிய அளவிலான பூச்சி / நோய்த்தாக்குதல் ஒட்டுமொத்த புழுவளர்ப்பையே பாதிப்புக்குள்ளாக்குவதோடு விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தையும் ஏற்படுத்துகிறது.

பட்டுக்கூடு உற்பத்தியில் ஏற்படும் இழப்புகள், இயற்கைச்சீற்றம் / தவிர்க்க முடியாத சூழலில் ஏற்படும் புழுவளர்ப்பு குடில் சேதம் ஆகியவற்றிலிருந்து விவசாயிகளுக்கு உதவிட பயிர்காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் இழப்புகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது:

- இயற்கைச் சீற்றம், பூச்சி மற்றும் நோய்த் தாக்குதலினால் ஏற்படும் புழுவளர்ப்புத் தோல்வி.
- இயற்கைச் சீற்றம் / விபத்துகளால் ஏற்படும் புழுவளர்ப்புமனை சேதம்.

- விவசாயி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு விபத்துக்கான மருத்துவச் செலவுகள்.
- விவசாயி மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு விபத்தால் ஏற்படும் மரணம்.

2023–2024–ஆம் ஆண்டில், 9177 விவசாயிகளுக்கு ரூ.73.325 இலட்சம் தொகை (அரசின் பங்கு – ரூ.46.710 இலட்சம், பயனாளியின் பங்கு – ரூ.26.613 இலட்சம்) காப்பீட்டு சந்தாவாக வழங்கப்பட்டுள்ளது. காப்பீட்டு காலம் செப்டம்பர் 15, 2023 முதல் செப்டம்பர் 14, 2024 வரை உள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஏப்ரல் 2024 வரை மாநிலம் முழுவதிலும் 127 பட்டு விவசாயிகளுக்கு ரூ.8.497 இலட்சம் இழப்பிற்கான காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 13. நிலையான வளர்ச்சி இலக்குகள்

2030–ஆம் ஆண்டிற்குள் "ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம்" என்ற தனது இலட்சிய இலக்கை அடைவதில் தமிழ்நாடு கவனம் செலுத்துகிறது. மேலும் பொருளாதாரம், சமூகம்



மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய முப்பரிமாணங்களில் சமநிலை மற்றும் ஒருங்கிணைந்த முறையில் நிலையான வளர்ச்சியைக் கொண்டுவருவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய மாநிலம் கணிசமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

பட்டுப்புழுக்களை வளர்த்து பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்யும் பட்டுவளர்ப்புத் தொழிலின் இறுதிப் பொருளாக கச்சா / முறுக்கேற்றப்பட்ட பட்டு உள்ளது. இந்த கச்சா / முறுக்கேற்றப்பட்ட பட்டு கைத்தறித் தொழிலுக்கான மூலப்பொருளாக அமைகின்றது. விவசாயம் சார்ந்த கிராமப்புற குடிசைத் தொழிலாக கருதப்படும் பட்டுவளர்ப்புத் தொழிலானது பண்ணை மற்றும் பண்ணை அல்லாத செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. பண்ணை மற்றும் பண்ணை அல்லாத செயல்பாடுகள் மூலம் இந்தத் துறையானது பின்வரும் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு மறைமுகமாக பங்களிக்கிறது:

1. கண்ணியமான வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி (இலக்கு 8)

2. தொழில், புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு (இலக்கு 9)

சிறந்த ஊதியத்துடன் கூடிய பணிச்சூழலை வழங்குவதற்காக, மல்பெரி சாகுபடி மற்றும் பட்டுப்புழு வளர்ப்பில் புதுப்பிக்கப்பட்ட தொழில்நுட்பங்களை பின்பற்றி பண்ணைத் தொழிலாளர்கள் ஈடுபடுதலைக் குறைக்கவும், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் இத்துறை பாராட்டத்தக்க விரிவாக்கப் பணிகளைச் செய்துள்ளது.

மல்பெரி சாகுபடி, பட்டுப்புழுவளர்ப்பு மனைகள் கட்டுதல், நவீன பட்டுப்புழுவளர்ப்பு உபகரணங்கள் மற்றும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள விவசாயிகளுக்கு உதவியளித்திட அரசின் பல்வேறு பயனாளிகள் நலத்திட்டங்களை ஒழுங்குமுறையுடன் செயல்படுத்துவதன் மூலம் மேலே கூறப்பட்ட மேம்பாடுகள் சாத்தியமாகியுள்ளன.



**2023-2024-ஆம் ஆண்டில் முக்கிய நலத்திட்டங்களின் கீழ் பயன்பெற்ற பயனாளிகள்**

| வ. எண் | திட்ட இனம் | பயனாளிகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | மல்பெரி நடவு | 4034 |
| 2 | பட்டுப்புழுவளர்ப்பு மனை | 1673 |
| 3 | பட்டுப்புழுவளர்ப்பு தளவாடங்கள் | 2000 |
| 4 | நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் | 1000 |

மாநிலத்தில் செயல்படும் பட்டுநூற்பு அலகுகளில் பெரும்பாலானவை சர்க்கா மற்றும் காட்டேஜ் பேசின் அலகுகள். இந்த பட்டுநூற்பு இயந்திரங்களில் உற்பத்தி செய்யப்படும் கச்சாப் பட்டு 2ஏ தரத்திற்கும் குறைவாக உள்ளது. அவை கைத்தறியில் மட்டுமே பயன்படுத்த முடிகிறது. சர்வதேச தரம் வாய்ந்த பட்டுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அதன் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், தரம், உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் கச்சாப் பட்டு உற்பத்தியில் தர மேம்பாடுகளைக் கொண்டு வருவதற்கும், மேம்படுத்தப்பட்ட பட்டுநூற்பு இயந்திரங்களைப் பயன்படுத்த பட்டு நூற்பாளர்களுக்கு ஊக்கமளிக்கப்பட்டு வருகிறது.

மாநிலத்தின் பட்டுநூற்பு துறையின் முக்கியத்துவத்தை கண்டறிந்த பிறகு, 2016–ஆம் ஆண்டு முதல் மத்திய பட்டு வாரியம் மற்றும் மாநில அரசின் நிதி உதவி மூலம் பட்டுநூற்பு சார்ந்த தொழில்களை மேம்படுத்த உந்துதல் அளிக்கப்படுகிறது.

துறையின் தொலைநோக்குக் குறிக்கோளை அடைய மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், மாநிலத்தின் கிராமப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு கண்ணியமான வேலை, பொருளாதார வளர்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் சிறுதொழில்களின் வளர்ச்சிக்கு வித்திடுவதில் கணிசமான பங்குவகிக்கிறது.

## 14. 2024–2025–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு

பட்டுவளர்ச்சித் துறைக்கான 2024–2025–ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில், திட்டம் மற்றும் திட்டம் சாரா பணிகளுக்கென கீழ்க்கண்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:



| வ. எண் | திட்டத்தின் பெயர் | | 2024–2025 ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | **திட்டப்பணிகள்** | | |
| அ | 1. பட்டு வளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதியின் கீழ் வளர்ச்சித் திட்டங்கள் | 150.00 | 370.00 |
| | 2. பட்டுவளர்ச்சி மேம்பாடு மற்றும் விலை உறுதிப்படுத்தும் நிதி (கணக்குகள் இடையே மாற்றம்) | 220.00 | |
| ஆ | மாநில திட்டங்கள் | | 2104.41 |
| இ | சில்க் சமக்ரா | | 2154.60 |
| ஈ | மேற்குத் தொடர்ச்சி மலைகள் அபிவிருத்தித் திட்டம் | | 0.01 |
| உ | சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் | | 0.01 |
| | **திட்டப் பணிகள் மொத்தம்** | | **4629.03** |
| 2 | **திட்டம் சாரா பணிகள்** | | |
| | அரசு அலகுகளைப் பராமரித்தல், ஊதியம் மற்றும் கூலித் தொகைகள் முதலியன | | 6683.23 |
| | **ஒட்டுமொத்தம் (திட்டப் பணிகள் + திட்டம் சாரா பணிகள்)** | | **11312.26** |

## தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்

### 1. முன்னுரை

தமிழ்நாட்டின் வளமான கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைப் பாதுகாத்து மேம்படுத்த, தொலைநோக்குப் பார்வையுடன் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் **டாக்டர் கலைஞர்** அவர்களால், **'தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்'** என்ற பெயரில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனமானது **'பூம்புகார்'** என்று அனைவராலும் போற்றப்படும் அளவிற்கு வளர்ந்துள்ளது. 26.07.1973 அன்று அலுவல் அளவில் இந்நிறுவனம் பொதுத்துறை நிறுவனமாக்கப்பட்டது.

மாநிலத்தில், கைவினை தொழில்துறையில் ஒரு முன்னோடி நிறுவனமாக நிலை உயர்த்தப்பட்ட பூம்புகார் நிறுவனம் கைவினைஞர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், அவர்களால் உற்பத்தி செய்யப்பட்ட கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தவும் உழைத்து வருகின்றது. முழுமையான அர்ப்பணிப்புடன் வியக்கத்தக்க



அளவில் சிறந்து விளங்குவதோடு, தமிழக கைவினைஞர்களின் பெருமையினை காட்சிப்படுத்துவதாகவும் விளங்கி வருகிறது. மிகவும் மெருகுடன் எளிதில் எவரையும் ஈர்க்கக்கூடியதுமான பித்தளையால் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்களில் தொடங்கி நேர்த்தியான மதிப்புமிக்க பஞ்சலோகம், மரச்சிற்பம் மற்றும் நீடித்து நிற்கும் அழகினையுடைய கற்களிலான சிற்பங்கள் வரை கைவினைஞர்களால் செய்யப்படும் இத்தகைய கைவினைப்பொருட்கள் இந்நிலப்பரப்பின் உன்னத சிறப்புடன் மிளிர்கின்றன.

பூம்புகாரது புகழ் தமிழ்நாட்டினை கடந்து வெகு தொலைவு வரையிலும் பரவியுள்ளது. அதுமட்டுமன்றி, உலகெங்கிலுமுள்ள தெளிவார்ந்த சிந்தனையுடன் கூடிய நுகர்வோருக்கும், கலை ஆர்வமுள்ள ஆர்வலர்களுக்கும் விலைமதிப்பில்லா தனது கைவினைப் பொருட்களை வழங்கும் பெருமையினையும் பெற்றுள்ளது. பூம்புகார், தனது அயராத முயற்சியின் வாயிலாக உலகளாவிய மதிப்புமிக்க ஆர்வலர்களையும் கைவினைஞர்களையும் இணைக்கும் ஒரு வலுவான பாலமாகச் செயல்படுவதோடு, உலகளாவிய

இணைப்புகளுடன் கலாச்சார பரிமாற்றத்தினை தழுவி நிற்கிறது.

பூம்புகார், சுமார் 50 ஆண்டு காலமாக கைவினைஞர்களின் கலை, பண்பாடு மற்றும் பொருளாதார மேம்பாட்டை பேணிக்காத்து வருவதுடன், தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களின் எல்லையில்லா படைப்பாற்றலுக்கும், அவர்களது நேர்த்தியான உழைப்பிற்கும் சான்றாக விளங்குகிறது.

**2. நிறுவனத்தின் தலையாய நோக்கங்கள்**

பூம்புகார் நிறுவனம் தமிழக கைவினைஞர்களால் உற்பத்தி செய்யப்படும் கைவினைப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்கள் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்நோக்கங்கள் பொருளாதார அதிகாரமளித்தலை மையப்படுத்துதல் மட்டுமன்றி, கைவினைஞர்களின் முன்னேற்றம், திறன் வளர்ச்சித் தனித்துவம், புத்தாக்கத்திறன் மற்றும் சமுதாய பாதுகாப்பு ஆகியவற்றிற்கு ஒட்டு மொத்த அரணாகத் திகழ்கின்றன.



**அ. கைவினைஞர்களின் முன்னேற்றம்**: கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி அவர்கள் படைக்கும் கைவினைப் பொருட்களை திறன் மிக்க சந்தைப்படுத்துதல் மூலமாக காட்சிப்படுத்துதலும், ஆர்வமுடைய நுகர்வோரிடம் கொண்டு சேர்ப்பதும் இந்நிறுவனத்தின் இன்றியமையா நோக்கமாகும்.

**ஆ. திறன் மேம்பாடு மற்றும் புத்தாக்க முயற்சி:** கைவினைஞர்கள் தொய்வின்றி தொடர்ந்து சிறந்த முறையில் தொழில் பழகிடவும், அதில் வளர்ச்சி கண்டிடவும் விரிவான பயிற்சித் திட்டங்களை பூம்புகார் வகுத்து செயல்படுத்தி வருகிறது. இப்பயிற்சித் திட்டங்கள் அவர்களின் திறன்களை மேம்படுத்துவது மட்டுமன்றி, புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் வடிவமைப்புகளை கண்டறிவதற்கும் ஊக்கமளிக்கிறது. இதன் மூலம், பாரம்பரியத் தொழிலை வளர்க்கவும், கைவினைஞர்களின் தனித் திறமைக்கு ஊக்கம் நல்கிடவும், வணிகச் சந்தையில் அவர்கள் வெற்றி காணவும் இந்நிறுவனம் வழிவகுக்கிறது.

**இ. உற்பத்தி மற்றும் தரத்தினை உயர்த்துதல்:** இந்நிறுவனம், கைவினைஞர்கள் தயாரிக்கும்

பொருட்களின் உற்பத்தியினைப் பெருக்கவும் அவற்றின் தரத்தை உயர்த்தவும் தன்னை அர்ப்பணித்து வருகிறது. புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல், திறன்வாய்ந்த உற்பத்தி செயல்முறையினைப் புகுத்துதல் ஆகியவற்றின் வாயிலாக, இந்நிறுவனம் கைவினைப்பொருட்கள் தயாரிக்கும் முறையில் உள்ள பணிப்பளுவைக் குறைத்திடவும், தொழில் வகையிலான இடர்ப்பாடுகளை முற்றிலும் அகற்றவும் செயல்பட்டு வருகிறது.

**ஈ. சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பு:** கைவினைஞர்களுக்கு சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பு வழங்குதலின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, கைவினைஞர்களின் நம்பிக்கையினையும் அவர்கள் சார்ந்துள்ள தொழிலில் ஒரு இணக்கமான சூழ்நிலை உருவாக்குவதை இந்நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**உ. தகவல்களை ஆவணப்படுத்துதல் மற்றும் எண்மமயமாக்கிப் பாதுகாத்தல்:** தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களின் உயரிய பாரம்பரியத்தினைப் பாதுகாக்க இந்நிறுவனம் கைவினைஞர்களது விவரங்களையும் அவர்களது படைப்புகளின்




வரலாற்றையும் ஆவணப்படுத்தி, அவற்றை தனி வலைத்தளத்தில் பதிவேற்றி, எண்மமயமாக்கியுள்ளது. இது பாரம்பரிய கைவினைத் தொழிலை பாதுகாத்தல், திறன் மிக்க சந்தைப்படுத்துதலை உருவாக்குதல் ஆகிய இரு நோக்கங்களையும் நிறைவு செய்கிறது.

**எ. கைவினைஞர்களை அங்கீகரித்தல் மற்றும் பாராட்டுதல்:** கைவினைத் தொழிலில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டுள்ள கைவினைஞர்களது சீரிய பணியினை சிறப்பித்து, உரிய முறையில் அவர்களை அங்கீகரிக்க வேண்டியது அவசியம் என்று இந்நிறுவனம் கருதுகிறது. இதனை நிறைவேற்றும் வகையில், 'கைவினைஞர்கள் தினக் கொண்டாட்டம்', விருதுகள் வழங்குதல் போன்ற பாராட்டு நிகழ்ச்சிகளை இந்நிறுவனம் தொடர்ந்து நடத்தி கைவினைஞர்களை அங்கீகரிக்கிறது. இவ்வகையான செயல்பாடுகள் அடுத்த தலைமுறையைச் சார்ந்த இளம் கைவினைக் கலைஞர்களை ஊக்கப்படுத்தி மூத்த கைவினைஞர்களது வழியினைப் பின்பற்றி நடக்கவும் துணை புரிகின்றன.

**ஏ. கைவினைக் குழுமங்களின் மேம்பாடு:** தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் உள்ள

கைவினைக் குழுமங்களைக் கண்டறிந்து அவற்றை ஒருங்கிணைத்து, அவற்றின் வளர்ச்சி குறித்த முக்கியத்துவத்தினை அடையாளப்படுத்தும் வகையில் இந்நிறுவனம் பாடுபட்டு வருகிறது. தேவையான உட்கட்டமைப்பு, பயிற்சி, சந்தைப்படுத்துவதற்கான உதவி ஆகியவற்றை இக்குழுமங்களுக்கு வழங்கிட மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் திட்டங்களின் மூலமாக கைவினைஞர்களின் வளர்ச்சியினை மேலோங்கச் செய்து வருகிறது.

## 3. நிருவாக அமைப்பு






### 3.1. தலைமை அலுவலகம்

இந்நிறுவனம் தலைவரின் வழிகாட்டுதலின்படி, பல்வேறு பின்புலங்களைக் கொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கிய இயக்குநர் குழுவால் வழிநடத்தப்படுகிறது.

இந்நிறுவனம் மேலாண் இயக்குநர் அவர்களின் தலைமையின்கீழ் இரண்டாம் நிலை அலுவலர்களான விற்பனை மற்றும் உற்பத்தி மேலாளர், நிதி மேலாளர் மற்றும் பணி மேலாளர் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர். இவர்களின் கீழ் உதவி மேலாளர்கள், அலுவலகக் கண்காணிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் பணியாற்றுகின்றனர்.

### 3.2. விற்பனை மற்றும் உற்பத்தி நிலையங்கள்

பூம்புகார் நிறுவனத்தின் விற்பனை மற்றும் உற்பத்தி நிலையங்கள், அனுபவமிக்க நிலைய மேலாளர்கள் தலைமையின் கீழ் இயங்கி வருகின்றன. விற்பனை உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், கணக்கர்கள் மற்றும் கைவினைஞர்கள் கொண்ட ஒரு குழுவோடு இணைந்து அவை பணியாற்றுகின்றன.

## 4. நிலையான வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals)

நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பவை ஐக்கிய நாடுகள் சபையால் அதன் உறுப்பு நாடுகளுக்காக வடிவமைக்கப்பட்டது. இது விரிவான 17 விதமான குறிக்கோள்களையும் அவற்றை அடைவதற்கான இலக்குகளையும், உட்குறியீடுகளையும் கொண்டவையாகும். ஒளிமயமான மற்றும் வளமான எதிர்காலத்தை உருவாக்கிடும் நோக்கில், உலகளாவிய நாடுகளால் செயல்படுத்தப்படுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு தொலைநோக்குச் செயல் திட்டமாக இந்தக் குறிக்கோள்கள் விளங்குகின்றன.

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், நிலையான வளர்ச்சி இலக்குகளைப் பெறுவதற்காக, குறுகியகால மற்றும் நீண்டகாலக் குறிக்கோள்களைக் கொண்டு செயலாற்றி வருகிறது. பயிற்சி, சந்தை வாய்ப்பு, வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி போன்ற பல்வேறு வழிமுறைகள் மூலம் கைவினைஞர்களின் திறன்களை உயர்த்துவதையும் அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதையும் தலையாய நோக்கங்களாக



இந்நிறுவனம் கொண்டுள்ளது. மேலும் நேரடி உதவியினையும் இந்நிறுவனம் வழங்கி வருகிறது. கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை நிலையங்களிலும், கண்காட்சிகளிலும் சந்தைப்படுத்தி அதன் மூலம் வருவாயினை ஈட்டி, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளோரின் வாழ்க்கையில் நிலையான வருவாய்க்கு வழிசெய்து உதவுவதன் மூலம் இந்நிறுவனம் அதன் இலக்கை அடைந்து வருகிறது.

இந்நிறுவனம், அதன் பணியுடன் இணைந்த இலக்கு வரையறை செய்யப்பட்ட நீடித்து நிலைபெறும் குறிக்கோள்களைக் கண்டறிந்து, அதற்கேற்ப செயல்பட்டும் வருகிறது. ஆண், பெண் என்ற இருபாலோருக்குமான பயன்தரத்தக்க நிலையான வேலைவாய்ப்பினை உருவாக்குதல், அவற்றின் மூலம் இலக்குகளை எய்துதல் மற்றும் அனைத்துத் தனி மனிதர்களின் வறுமையினை முற்றிலுமாக ஒழித்திடல் என்பவை இந்தக் குறிக்கோள்களுள் அடங்கியுள்ளன.

**இலக்கு எண் 1.1. அனைத்து மக்களின் கொடிய வறுமையினை ஒழித்தல்**

வறுமையை ஒழித்தல் எனும் இலக்கிற்கு ஆதரவு நல்கிட, இந்நிறுவனம் பல திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டங்களை முறையாக உருவாக்கி அவற்றை வடிவமைத்து செயல்படுத்தி வருகிறது. இந்த பயிற்சிகள் கைவினைஞர்கள் புதிய வடிவமைப்புகளை உருவாக்கவும், அவர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்கவும், இதன்மூலம் அவர்களது வருவாயைப் பெருக்கவும் உதவுகின்றன. மேலும் நாட்டின் முக்கிய நகரங்களில் கைவினைப் பொருட்களைச் சந்தைப்படுத்தி வருமானம் ஈட்டச் செய்திடவும் அதன் வாயிலாக கைவினைஞர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்திடவும் இந்நிறுவனம் வழிவகை செய்கிறது.

மாநில மற்றும் ஒன்றிய அரசுகளின் மூலம் வழங்கப்படும் சமூக நலன் மற்றும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை கைவினைஞர்களிடையே ஏற்படுத்த இந்நிறுவனம் பல முகாம்களை நடத்தி வருகிறது.



**இலக்கு 8 – கண்ணியமான பணி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்குதல்**

**உட்குறியீடு 8.5 அனைத்து ஆடவர் மற்றும் மகளிருக்கும் பயன்தரத்தக்க வேலைவாய்ப்பினை முழுமையாக எய்திடல்**

கைவினைஞர்களுக்கு கண்ணியமான பணி மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்கிடுவதற்கான குறிக்கோள்களுக்கு இணங்கும் வகையில், தமிழ்நாட்டில் நவீன இயந்திரங்களுடன் கூடிய 14 பொது வசதி மையங்களை (CFC) இந்நிறுவனம் அமைத்துள்ளது. கைவினைஞர்களுக்கு நவீன இயந்திரப் பயன்பாட்டு அணுகுதலையும், விலையில்லாக் கருவிகளை வழங்குவதன் மூலம் இந்த மையங்கள் கைவினைப் பொருட்களுக்கான முக்கியத்துவம் பெற்றுள்ள மையங்களாக விளங்கிவருகின்றன.

**இலக்கு 9: தொழிற்சாலை, புத்தாக்கம் மற்றும் உட்கட்டமைப்பு**

பொருளாதார வளர்ச்சிக்கு துணைபுரிந்து, கைவினைஞர்களின் நல்வாழ்வை மேம்படுத்திடவும் தரம், நம்பிக்கை, நீடிப்புத்தன்மை மற்றும் வலுவான கட்டமைப்பு ஆகியவற்றை தொடர்புடைய பகுதிக்குள்

உருவாக்குவதற்கும் இந்நிறுவனம் தொழிற்சாலை, புத்தாக்கம், உட்கட்டமைப்பு ஆகிய ஒற்றைக்குடையின் கீழ் அவற்றைக் கொண்டுவரும் நோக்கில் செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட நோக்கங்களை நிறைவேற்றிட, பூம்புகார் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக அதன் உற்பத்தி மையங்களையும் விற்பனை நிலையங்களையும் புதுப்பிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. இதன் மூலம் கைவினைஞர்களுக்கும், ஊழியர்களுக்கும் நல்ல பணிச் சூழல் உருவாக்கி தரப்பட்டுள்ளது.

பூம்புகார் நிறுவனம் சென்னை, கோயம்புத்தூர், புதுதில்லி மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களில் உள்ள முக்கிய விற்பனை நிலையங்கள் புதுப்பொலிவுடன் தோற்றமளித்திட புதுப்பிக்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது. நாச்சியார்கோயில், சுவாமிமலை, தஞ்சாவூர், மதுரை, வாகைக்குளம், மாமல்லபுரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய இடங்களில் உள்ள உற்பத்தி நிலையங்கள் அனைத்து வசதிகளுடன் புனரமைக்கப்பட்டுள்ளன.



## 5. கைவினைப் பொருட்களை சந்தைப்படுத்தும் முயற்சிகள்

### 5.1. விற்பனை நிலையங்கள்

பூம்புகார், தமிழ்நாட்டில் உள்ள கைவினைஞர்களுக்கு ஆதரவு அளித்திட தன்னை அர்ப்பணித்துள்ளது. அவர்கள் தயாரிக்கும் அழகிய கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்தி, விற்பனை செய்ய சென்னை, புதுதில்லி, கொல்கத்தா, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, கன்னியாகுமரி, மாமல்லபுரம் மற்றும் சுவாமிமலை ஆகிய இடங்களில் 12 பெரிய விற்பனை நிலையங்களையும், கூடுதலாக சென்னை விமான நிலையம், வண்டலூர் உயிரியல் பூங்கா, எழும்பூர் அருங்காட்சியகம், கொடைக்கானல், திருநெல்வேலி, கன்னியாகுமரி (2 இடங்கள்), கேவிடியா (குஜராத்) ஆகிய முக்கியமான 8 இடங்களில் சிறிய விற்பனைக் கூடங்களையும் இந்நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது.

இந்த விற்பனை நிலையங்கள் அனைத்தும், கணினிமயமாக்கப்பட்ட விற்பனை முறை மற்றும் அலுவலகப் பணிகள், கண்காணிப்பு கேமராக்கள், ஆகியவற்றைக் கொண்டுள்ளதோடு அங்கு வருகை தரும் வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சியுடன்

பொருட்களை வாங்கிச் செல்லும் வகையிலும், அவர்களுக்கு நிறைவானதோர் அனுபவம் கிடைத்திடும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளன.

**5.2. பூம்புகார் விற்பனை நிலையங்களின் மறுசீரமைப்பு**

விற்பனை நிலையங்களில் கைவினைப் பொருட்களை வாங்கும் சூழலை உருவாக்குவதன் முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு, பூம்புகார் நிறுவனம் சென்னை, கோயம்புத்தூர், புதுதில்லி, கொல்கத்தா மற்றும் கடலூர் ஆகிய இடங்களிலுள்ள தனது முக்கிய விற்பனை நிலையங்களில் மறுசீரமைப்பு பணியினை மேற்கொண்டு வருகிறது. இம்மறுசீரமைப்புப் பணியின் மூலம் விற்பனை நிலையங்கள் மேலும் தோற்றப்பொலிவு பெறவுள்ள நிலையில் அங்கு வருகை புரியும் வாடிக்கையாளர்களுக்கு நல்லதொரு வரவேற்பினை அவை நல்கி, தமிழ்நாட்டின் பாரம்பரியமிக்க கலைப்பொருட்களை தேர்வு செய்து அவர்கள் வாங்கி மகிழ்ந்திட உதவுகிறது.



**5.3. விற்பனைக் கண்காட்சிகள்**

**5.3.1. விற்பனை நிலைய உட்புறக் கண்காட்சிகள்**

2023–2024–ஆம் நிதியாண்டில் பூம்புகார் நிறுவனம் 119 உட்புறக் கண்காட்சிகளை அனைத்து விற்பனை நிலையங்களிலும் நடத்தியுள்ளது. இக்கண்காட்சிகள் கைவினைஞர்களின் கைத்திறனை வெளிக்காட்டுவது மட்டுமின்றி, கலாச்சார கண்காட்சிகளான கொலுபொம்மைகள், கிருஷ்ணதரிசனம், கணேஷ்தரிசனம் மற்றும் பல பண்டிகைக் கால கண்காட்சிகளையும் கொண்டுள்ளன. இக்கண்காட்சிகள் கைவினைப் பொருட்கள் மீதான கலை ஆர்வலர்களை ஈர்ப்பதோடு, தமிழ்நாட்டின் பல்வேறு கலை மரபுகளின் மீதான பாராட்டுதலினை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளன.

**5.3.2. வெளிப்புறக் கண்காட்சிகள்**

பூம்புகார், தனது விற்பனை நிலையங்களுக்கு அப்பாற்பட்டு சென்னை, கொல்கத்தா, புதுதில்லி மற்றும் பிற இடங்களில் கண்காட்சி மற்றும் விற்பனை நிகழ்ச்சிகளை நடத்தி வணிகத்தை மேலும் விரிவடையச் செய்துள்ளது. இந்த வெளிப்புறக்

கண்காட்சிகளில் தமிழகக் கைவினைஞர்கள் தமது அற்புத படைப்புகளை பரந்த சந்தையில் காட்சிப்படுத்தவும் அவற்றை கலை ஆர்வலர்களுக்குக் கொண்டு சென்று, சந்தைபடுத்தி பயனடையவும் வழிவகைகள் காணப்பட்டுள்ளன. அதன்மூலம், கைவினைஞர்களின் கைவினைத் திறனை ஊக்குவித்திடவும் பண்பாட்டு பரிமாற்றத்தினைச் செழித்திடச் செய்யவும் அவை பெரிதும் உதவுகின்றன.

### 5.3.2.1. சிறப்புக் கண்காட்சிகள்

பூம்புகார், உட்புற மற்றும் வெளிப்புற கண்காட்சிகளைத் தவிர்த்து, சில சிறப்பு வாய்ந்த கண்காட்சிகளிலும் பங்கேற்றுள்ளது. தமிழக கலாச்சாரத்தை கைவினைக் கலைகள் வாயிலாகப் புகழ் பெறச் செய்ய சிறப்பு வாய்ந்த பல கண்காட்சிகளில் பங்கேற்று உள்ளதன் மூலமாக நம் தமிழகக் கலைப்படைப்பு வரலாற்றை மிகச்சிறந்த முறையில் வெளிப்படுத்தி, வாடிக்கையாளர்களைக் கவர்ந்து நம் கைவினைஞர்கள் தயாரிக்கும் தலைசிறந்த படைப்புகளையும் காட்சிப்படுத்துகிறது.



### 5.3.2.2. வணிகத்தோடு வணிகம் தொடர்பான கண்காட்சிகள் மற்றும் சந்தைப்படுத்துதல்

பூம்புகார், பல மதிப்புமிக்க வணிகர்களிடம் வணிகம் செய்வதனையும் தேசிய மற்றும் சர்வதேசக் கண்காட்சிகளில் நமது தமிழக கைவினைஞர்களின் படைப்புகளைக் காட்சிப்படுத்தி அவற்றை சந்தைப்படுத்துதலையும் மேற்கொண்டுள்ளது. அவற்றுள் குறிப்பிடத்தக்க சில நிகழ்வுகள் பின்வருமாறு:–

- ❖ புதுதில்லி பிரகதி மைதானத்தில் நடைபெற்ற G–20 உச்சிமாநாட்டில், 09.09.2023 மற்றும் 10.09.2023 ஆகிய இரு நாட்கள் வர்த்தகக் கண்காட்சியில் கலந்து கொண்டமை.
- ❖ 13.10.2023 முதல் 16.10.2023 வரை பெருநகர் நொய்டாவில் நடைபெற்ற இந்தியக் கைவினை மற்றும் பரிசுப் பொருட்கள் கண்காட்சியில் கலந்து கொண்டமை.
- ❖ 14.11.2023 முதல் 27.11.2023 வரை புதுதில்லி பிரகதி மைதானத்தில்

நடைபெற்ற பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சியில் கலந்து கொண்டமை.

❖ 07.01.2024 மற்றும் 08.01.2024 ஆகிய இரு நாட்களிலும் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின்போது கண்காட்சி நிகழ்த்தியமை.

❖ 11.01.2024 மற்றும் 12.01.2024 ஆகிய இரு நாட்களிலும் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற தமிழகத்தில் வசிக்காத "உலகத் தமிழர்களுக்கான தினத்தில்" பூம்புகார் நிறுவனம் கலந்து கொண்டமை.

❖ 26.01.2024 மற்றும் 27.01.2024 ஆகிய இரு நாட்களிலும் தமிழ்நாடு BEAT EXPO 2024 – TAHDCO சந்திப்பு சென்னை வர்த்தக மையத்தில் பங்குபெற்றமை.

❖ 06.02.2024 முதல் 10.02.2024 வரை பெருநகர் நொய்டாவில் இந்திய கைவினை மற்றும் பரிசுப் பொருட்கள் கண்காட்சியில் கலந்து கொண்டமை.



❖ 17.02.2024 அன்று சென்னையில் நடைபெற்ற அனைத்து பிரிவினருக்கும் ஊக்கமளிப்பு நிகழ்வு.

❖ 26.02.2024 முதல் 29.02.2024 வரை புதுதில்லி பாரத் டெக்ஸ்–2024 கண்காட்சியில் கலந்து கொண்டமை.

தமிழகத்தில் உள்ள கைவினைஞர்களின் படைப்புகளைக் கொள்முதல் செய்து உலகளாவிய சந்தையினை ஏற்படுத்த பூம்புகார் தன்னை வெகுவாக அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இதனை எய்துவதற்கு, பூம்புகார் வணிகத்திற்கு வணிகம் தொடர்பான ஓர் உறுதியான வலைத்தளத்தை உருவாக்கியுள்ளது. அதன் மூலம் நேரடி இணையவழி விற்பனைப் பரிவர்த்தனைகள் நிகழ்த்திடுவதற்கு வாய்ப்பு உருவாகியுள்ளது. பன்னாட்டு அரங்கில் தமிழ்நாட்டின் கைவினைப் பொருட்களை கொண்டு செல்வதற்கு, ஏற்றுமதி நிறுவனங்களுடன் வணிக ஒப்பந்தங்களை இந்நிறுவனம் ஏற்படுத்தியுள்ளது.

## 5.4. ஏற்றுமதி

பாரம்பரிய கைவினைப்பொருட்களுக்கு பிரசித்தி பெற்ற பூம்புகார் நிறுவனம் அவற்றை ஏற்றுமதி செய்வதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளது. சிங்கப்பூர், மலேசியா, ஜெர்மனி, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுக்கு பஞ்சலோக சிற்பங்கள், பித்தளை அலங்கார விளக்குகள், மரத்திலான அலங்காரப் பொருட்கள், தஞ்சாவூர் ஓவியங்கள் மற்றும் பல கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்கிறது.

இந்நிறுவனம் 2023-2024-ஆம் நிதியாண்டில் சுமார் ரூபாய் 82.28 இலட்சம் மதிப்பிலான கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்து வருவாய் ஈட்டியுள்ளது. இது பன்னாட்டு சந்தைகளில் பாரம்பரிய கைவினைப் பொருட்களின் விற்பனை மற்றும் தேவையினையும் அவற்றின் வெற்றியினையும் குறிப்பிடுவதாக அமைந்துள்ளது. இந்த ஏற்றுமதி வருவாய் மூலம் வெளிநாட்டு மக்களிடையே நமது தமிழ்நாட்டின் தலைசிறந்த கைவினைஞர்களின் தொன்மையான கலாச்சாரமிக்க படைப்புகளை காட்சிப்படுத்தி அவர்களது



கலைத்திறனை ஊக்கப்படுத்திடவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 5.5. பிற வணிக மேம்பாடுகள்

தனது இயல்பான வணிக நடவடிக்கைகளைத் தவிர அரசுக் கட்டடங்கள், பெரு நிறுவனக் கட்டடங்கள், அவற்றின் வளாகங்கள், விமான நிலையங்கள் மற்றும் பெருமைவாய்ந்த நிறுவனங்களில் அழகூட்டும் பணிகள், உள்அலங்காரம் ஆகிய பணிகளும் இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பூம்புகார் பல நிறுவனங்களுக்கு பரிசுப் பொருட்கள், அழகிய கைவினைப் பொருட்கள், விருது பதக்கங்கள், கோப்பைகள், நினைவுப் பரிசுகள் ஆகியவற்றை வழங்கி அதன் மூலம் தனது வருவாயினை பெருக்கி வருகிறது. இதன் மூலம் 2023-2024-ஆம் நிதியாண்டில் இந்நிறுவனம் சுமார் ரூபாய் 12.54 கோடி வருவாய் ஈட்டி அதன் நிலையான வளர்ச்சி மற்றும் விற்பனை விரிவாக்கத்தில் மேலோங்கி உள்ளது.

## 5.6. ஆண்டு விற்பனையளவு

2023-2024-ஆம் நிதியாண்டில், இந்நிறுவனம் ரூபாய் 48.12 கோடி விற்பனை அளவினை

எட்டியுள்ளது. இது இந்நிறுவன வரலாற்றில் அதிகப்படியான விற்பனையாகும். சென்ற ஆண்டு, ரூபாய் 40.41 கோடி அளவிற்கு விற்பனை நிகழ்ந்துள்ளது.

### 5.7. மின் வணிகம் மூலம் விற்பனை

பூம்புகார் கைவினைப் பொருட்களை உலகளாவிய அளவில் விற்பனை செய்வதற்காக www.poompuhar.com என்ற வலைத்தளத்தின் மூலம் விற்பனை செய்கிறது. மேலும், அமேசான் (Amazon), மைஸ்டோர் (Mystore ONDC), எக்ஸாடிக் இந்தியா (Exotic India) மற்றும் டென்காலி (Denkali) போன்ற மின் வணிக இணையதள நிறுவனங்களுடன் இணைந்து, விற்பனையினை மேற்கொண்டு வருகிறது. மேலும், பூம்புகார் மற்ற மின் வணிக தள (e–Commerce) நிறுவனங்களுடன் இணைந்து மின் வணிகத்தை விரிவுபடுத்தும் பணியிலும் ஈடுபட்டுள்ளது.

## 6. பூம்புகார் உற்பத்தி நிலையங்கள்

பூம்புகார் நிறுவனம், நாச்சியார்கோயில் (பாரம்பரிய வெண்கல மற்றும் பித்தளை விளக்குகள்), மதுரை (பித்தளை விளக்குகள் மற்றும் கலைப்பொருட்கள்), வாகைக்குளம் (பித்தளை விளக்குகள் மற்றும்



கலைப்பொருட்கள்), சுவாமிமலை (பஞ்சலோக சிலைகள்), தஞ்சாவூர் (கலை தட்டுகள்), கள்ளக்குறிச்சி (மரச் சிற்பங்கள்) மற்றும் மாமல்லபுரம் (கற்சிற்பங்கள்) ஆகிய 7 உற்பத்தி நிலையங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த உற்பத்தி நிலையங்களின் மூலம், கைவினைக் கலைஞர்களுக்கு தொடர்ச்சியாக வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இப்பகுதிகளுக்கு அருகிலுள்ள குழுமங்களைச் சேர்ந்த கைவினைஞர்களும் தங்கள் பொருட்களை தயாரிக்க இந்த உற்பத்தி நிலையங்களை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிறுவனம் 2023–2024–ஆம் நிதியாண்டில், ரூபாய் 3.80 கோடி மதிப்பிலான கைவினைப் பொருட்களை தனது உற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்துள்ளது.

## 7. தகவல் தொடர்பு தொழில்நுட்ப செயல்பாடுகள் (IT Initiatives)

தகவல் தொடர்பு தொழில்நுட்ப (ICT) பயன்பாடு இந்நிறுவனத்தில் அனைத்துப் பிரிவுகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. சந்தைத்திறன், நிதி

மேலாண்மைத் திறன் மற்றும் நிருவாகத்திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதற்காகப் பின்வரும் நோக்கங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது:

- ❖ கைவினைஞர்கள் மற்றும் அவர்களின் திறமைக்கான மின் தகவல் தொகுப்பு உருவாக்குதல்.
- ❖ பூம்புகார் உடனான வாடிக்கையாளர் / நுகர்வோர் அனுபவத்தில் நம்பகத் தன்மையை உருவாக்குதல்.
- ❖ நிருவாகத்தை மேம்படுத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டவற்றிற்கு முழுமையான சேவையினை வழங்குதல்.

### 7.1. சந்தை வாய்ப்பில் சீர்திருத்தங்கள்

பூம்புகார் தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி தனது சந்தை முறைகளில் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

- ➢ பூம்புகார் தனது பொருட்களை உலக அளவில் நேரடியாக மின் வணிகம் (Online) மூலம் விற்பனை செய்வதற்கு



www.poompuhar.com என்ற சொந்த மின் வணிக வலைத்தளத்தினை அமைத்துள்ளது. கூடுதலாக, பிற மின் வணிக நிறுவனங்களான அமேசான் (Amazon), மைஸ்டோர் (Mystore ONDC) போன்ற மற்ற நிறுவனங்களுடனும் இணைந்து தனது கைவினைப் பொருட்களின் விற்பனையை மேற்கொள்கிறது.

- ➢ பூம்புகாரின் விற்பனை நிலையங்களில் உள்ள அனைத்து கைவினைப் பொருட்களுக்கும் மின்விலை குறியீடு இடப்பட்டுள்ளது. இதன் மூலம், பொருள் கையிருப்பு மேலாண்மை, விற்பனைக் கண்காணிப்பு மற்றும் பொருட்கள் குறித்த துல்லியமான விவரங்கள் ஆகியவற்றினைப் பெற முடிகிறது.
- ➢ பூம்புகாரின் அனைத்து விற்பனை நிலையங்களிலும் ஒருங்கிணைந்த மென்பொருள் மின் விலைச்சீட்டு முறை பயன்படுத்தப்படுகிறது.

- இன்ஸ்டாகிராம் (Instagram), ஃபேஸ்புக் (Facebook), யூடியூப் (YouTube) போன்ற சமூக ஊடகங்கள் வாயிலாக, பூம்புகார் நிறுவனம் இணைய வழி விற்பனை யுக்திகளைப் பின்பற்றி வருகிறது. ஒரு பரந்த நுகர்வோர் எல்லையினைச் சென்றடைந்து, அவர்கள் மத்தியில் வணிகக்குறி தெரிவு நிலையினை இந்நிறுவனம் ஏற்படுத்தும் பொருட்டு விளம்பரம், வணிக ஊக்குவிப்பு, கைவினைப்பொருட்கள் விற்பனை ஆகியவற்றை கையாளுவதற்கு மேற்கூறிய தளங்களைப் பயன்படுத்தி வருகிறது.

### 7.2. பூம்புகார் மெய்நிகர் தோற்ற விற்பனை நிலையம் (Virtual Reality Poompuhar Showroom)

பூம்புகார், நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி சென்னையில் மெய்நிகர் தோற்ற விற்பனை நிலையத்தை உருவாக்கியுள்ளது. அது தனது படைப்புகளை மெய்நிகர் தொழில்நுட்பம் மூலம் முப்பரிமாண வடிவில் உருவாக்கி, அந்தப் பொருட்களை மெய்நிகர் தோற்ற முப்பரிமாண பிம்பங்களாக தயாரித்து அதனை மெய்நிகர் தோற்ற



இணையகத்தில் (Virtual Reality Server) பதிவேற்றம் செய்கிறது.

### 7.3. வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையம் (DRDC)

பூம்புகார் நிறுவனம், முப்பரிமாண வடிவமைப்புடன் கூடிய முப்பரிமாண அச்சுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தற்காலத்திற்கு ஏற்ப புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவதற்காக வடிவமைப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலையத்தினை (DRDC) உருவாக்கியுள்ளது. இதன்மூலம் நமது தொன்மை வாய்ந்த பாரம்பரியமிக்க கைவினைப் பொருட்களை பாதுகாக்கும் அதே நேரத்தில் நவீனக் கூறுகளையும் அதனுடன் இணைத்துக் கொள்ள முடிகிறது.

### 7.4. நினைவுப் பரிசுகள்

பூம்புகார் நிறுவனம் நினைவுப் பரிசுப் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை தனது வாடிக்கையாளர்கள் மற்றும் கலை ஆர்வலர்களுக்கு சந்தைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. முக்கியமான அரசு நிகழ்ச்சிகளிலும், பெரு நிறுவன நிகழ்ச்சிகளிலும் நினைவுப் பரிசுகளை வழங்குவது

குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தினைப் பெற்றுள்ளது. மாமல்லபுரம் அர்ஜுனன் தபசு, ஐந்து ரதம், கடற்கரைக் கோயில், ஜல்லிக்கட்டு, தமிழ்நாட்டின் பாரம்பரிய நடனங்கள், தாராசுரம் கோயில், கீழடி போன்ற தமிழ்நாட்டின் முக்கிய நினைவுச் சின்னங்களை சித்தரிக்கும் வகையில் நினைவுப் பொருட்கள் வடிவமைக்கப்பட்டு, சந்தைப்படுத்துவதன் மூலம் வருவாய் ஈட்டப்படுகிறது.

## 8. கைவினைஞர்களுக்கான மேம்பாடு மற்றும் நலத்திட்டங்கள்

கைவினைஞர்களின் நலனே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். எனவே, பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், கைவினைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த இந்நிறுவனம் பாடுபட்டு வருகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு:

### 8.1. விருதுகள்

ஒவ்வோர் ஆண்டும் பூம்புகார் நிறுவனம், கைத்திறத் தொழிலில் தனித்திறமைக் கொண்ட கைவினைஞர்களை அங்கீகரித்துப் பாராட்டும்



பொருட்டு கீழ்க்காணும் விருதுகளை வழங்கி வருகிறது:

1. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது – 10 முதுமை எய்தியுள்ள தலை சிறந்த கைவினைஞர்கள்.
2. பூம்புகார் மாநில விருது – 10 தலை சிறந்த கைவினைஞர்கள்.
3. பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது – 85 சிறந்த கைவினைஞர்கள்.
4. பயன்பாடு சார்ந்த கைவினைப் பொருட்கள் விருது – 3 சிறந்த கைவினைஞர்கள்.
5. கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி விருது – 2 சிறந்த ஏற்றுமதி கைவினைஞர்கள்.
6. குழு உற்பத்தி விருது – 3 சிறந்த குழுக்கள்.
7. அடுத்த தலைமுறை கைவினைஞர்களுக்கான கைத்திறன் போட்டி விருது – 150 இளைய தலைமுறை கைவினைஞர்கள்.

நாட்டிலேயே கைவினைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான விருதுகளை வழங்கும் பெருமைமிக்க மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

**8.2. பொது வசதி மையங்கள்**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், மாநிலத்தில் 14 பொது வசதி மையங்களை பல்வேறு கைவினைக் குழுமங்களில் ஏற்படுத்தியுள்ளது. இந்தப் பொது வசதி மையங்கள் மூலம் கைவினைஞர்கள் பயன்படுத்தும் வகையில், பயிற்சிகள் அளித்தல், உட்கட்டமைப்பு வசதி, நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ஆகிய வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இங்கு CNC இயந்திரங்கள், முப்பரிமாண அச்சு இயந்திரங்கள், மின் உலைகள், 4 அச்சுகொண்ட இயந்திரம் மற்றும் நவீன மரம் செதுக்கும் இயந்திரம் ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன. இவை வேலையில் ஏற்படும் இடர்களைத் தவிர்த்து, புதிய வடிவமைப்புகளை உருவாக்கி கைவினைஞர்களின் உற்பத்திச் செயல்திறன் மேம்படத் துணை புரிகிறது.

இந்த 14 பொதுவசதி மையங்களுள், 3 பொது வசதி மையங்கள் நலிந்த கைத்திறத் தொழில்களுக்கு



புத்துயிர் அளிக்கும் வகையில் காருக்குறிச்சி களிமண் கைத்திறத் தொழில், பத்தமடைக் கோரைப்பாய்கள் மற்றும் விக்கிரவாண்டி சுடுகளிமண் ஆகிய கைத்திறத் தொழிலுக்குரிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுடன் கூடிய பொது வசதி மையங்களாக அமைக்கப்பட்டுள்ளன.

**8.3. உபகரணங்கள் வழங்குதல்**

இந்நிறுவனம், தமிழ்நாட்டின் பல்வேறு குழுமங்களிலுள்ள கைவினைஞர்களின் திறன் மேம்பாட்டிற்கும் அவர்களது உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் பல்வேறு கைத்திறத் தொழில்களுக்கான விலையில்லா உபகரணங்களை அவர்களுக்கு வழங்கியுள்ளது.

**8.4. பயிற்சித் திட்டங்கள் / பட்டறைகள்**

தமிழ்நாட்டின் பல்வேறு கைவினைக் குழுமங்களிலுள்ள கைவினைஞர்களுக்கு இந்நிறுவனம் திறன் மேம்படுத்தும் பயிற்சிகள் மற்றும் ஒருங்கிணைந்த வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பட்டறை வகுப்புகளை நடத்தி வருகிறது. புதிய பயிற்சி மற்றும் திறன் பட்டறை வகுப்புகள் நடத்துவதன் மூலம், கைவினைஞர்களின் உற்பத்தித் தரத்தை

உயர்த்துவதோடு புதிய புதுமையான வடிவமைப்புகள் மற்றும் புதுமையான தொழில்நுட்பமும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இவ்வகைப் பயிற்சிகள் தரமான உற்பத்திக்கு வழிவகுக்கும்.

### 8.5. நகர்ப்புறக் கண்காட்சித் திடல்கள் (Urban Haats)

சுற்றுலா நகரங்களிலும், பெருநகரங்களிலும் உள்ள நகர்ப்புறக் கண்காட்சித்திடல்கள் சந்தைப்படுத்துதலில் நிரந்தர உட்கட்டமைப்புகளாக விளங்குகின்றன. இத்திடல்கள் கைவினைஞர்களும் கைத்தறி நெசவாளர்களும் தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை வாடிக்கையாளர்களிடம் நேரடியாக சந்தைப்படுத்தும் வசதியினை அளித்து வருகின்றன. நகர்ப்புறக் கண்காட்சித்திடல்கள், கைவினைஞர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை வாடிக்கையாளர்களிடம் இடைத்தரகர்களின் ஆதிக்கமின்றி நேரடியாக ஆண்டு முழுவதும் விற்பனை செய்ய வழிவகுக்கிறது. இத்திடல்கள், வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு உணவுக் கூடம், கண்காட்சிகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் ஆகிய வசதிகளை ஏற்படுத்தித் தந்து அவர்களுக்கு நல்லதொரு அனுபவத்தினை நல்குகிறது.



பூம்புகார், கன்னியாகுமரி மற்றும் மாமல்லபுரம் ஆகிய இரண்டு இடங்களில் நகர்ப்புறக் கண்காட்சித் திடல்களை அமைத்துள்ளது. கன்னியாகுமரி நகர்ப்புறக் கண்காட்சித்திடல், 50 நிரந்தரக் கடைகள், உணவுக் கூடம், கைவினைஞர்கள் தங்கும் அறை, திறந்தவெளி அரங்கம், வாகனம் நிறுத்துமிடம் மற்றும் எழில்மிகு இயற்கை நிலப்பரப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. அதே போன்று மாமல்லபுர நகர்ப்புறக் கண்காட்சித்திடல், 50 நிரந்தரக் கடைகள், வாகனம் நிறுத்துமிடம் மற்றும் சிறுவர்கள் விளையாட்டு பூங்கா ஆகியவை எழில்மிகு இயற்கை நிலப்பரப்புடன் அமைந்துள்ளது.

இவ்வகையான மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் இந்நிறுவனம் கைவினைஞர்களை முன்னேற்றி அவர்தம் கைவினைத் திறனையும் ஊக்குவித்து அவர்களது நல்வாழ்விற்கும் துணைபுரிகிறது.

### 8.6. கைவினை சுற்றுலா கிராமம், மாமல்லபுரம் (Craft Tourism Village, Mamallapuram)

கைவினை சுற்றுலா கிராமம் மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கைவினைஞர்களுக்கு வீடுகள், உற்பத்தி நிலையங்கள் மற்றும் காட்சிப்

பகுதிகள் ஆகியவற்றை மேம்படுத்தி, மாமல்லபுரத்திலுள்ள சுற்றுலா தலங்களுடன் இணைத்து அங்கு தயாரிக்கப்படும் கற்சிற்பப் பொருட்களை வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்வதோடு இந்த இடங்களை சுற்றுலாப் பயணிகளை கவரும் விதத்தில் அமைத்திடுவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 1.80 கோடி செலவில் மாமல்லபுரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கீழ்க்கண்ட பணிகள் முடிவடைந்துள்ளன:

❖ காரணை கிராமத்தில் 26 கைவினைஞர்களின் வீடுகள் அழகுபடுத்தப்பட்டு, முகப்புச்சுவர் எழுப்பி, வண்ணம் பூசப்பட்டு, சிமெண்ட் சாலை மற்றும் வடிகால்வாய் வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளன.

❖ ஐந்துரத வீதியில் உள்ள கைவினைஞர்களின் உற்பத்தி நிலையங்களில் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.



❖ மாமல்லபுரத்தின் நுழைவு வாயிலில் நிறுவப்பட்டுள்ள கைவினை சுற்றுலா கிராமத்திற்கான பிரம்மாண்டமான சிற்பக்கலைத்தூண் சுற்றுலாப் பயணிகளையும் பார்வையாளர்களையும் கவரும் வண்ணம் அமைந்துள்ளது. மாமல்லபுரத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை வரவேற்கும் நுழைவுவாயிலாக இது அமைந்துள்ளது.

❖ கைவினை சுற்றுலா கிராமத்திற்கான விளம்பரப் பதாகைகள் மற்றும் வழிகாட்டிகள் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

### 8.7. கைவினை விழிப்புணர்வு முகாம்கள்

மாநில மற்றும் ஒன்றிய அரசின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ள கைவினைஞர்களுக்கு உதவும் பொருட்டு தமிழ்நாட்டின் பல்வேறு குழுமங்களில் கைவினை விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. இந்த விழிப்புணர்வு முகாம்கள் பரந்த அளவில் தகவல்களை அளிப்பதோடு கைவினைஞர்களது தொழில்

மேம்பாட்டிற்கும், தனிப்பட்ட நலன்களுக்குமான வழிகாட்டுதல்களையும் வழங்குகிறது.

பின்வரும் நோக்கங்களுக்காக கைவினைஞர் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன:

- தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர் நல வாரியத்தின் (https://tnuwwb.tn.gov.in) கீழ் கைவினைக் கலைஞர்களைச் சேர்ப்பது / புதுப்பித்தல் குறித்த விழிப்புணர்வு.
- தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகத்தின் (https://register.eshram.gov.in) இ–ஷ்ரம் இணைய முகப்பின் கீழ் கைவினைக் கலைஞர்களைச் சேர்ப்பது குறித்த விழிப்புணர்வு.
- கைவினைக் கலைஞர்களுக்கான, 'தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியத்தின்' நலத்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு.
- "PEHCHAN" அடையாள அட்டையின் மூலமாக கைவினைஞர்களைப் பதிவு செய்தல் / பதிவினைப் புதுப்பித்தல் உள்ளிட்ட அபிவிருத்தி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) அலுவலகத்தின் நலன் / மேம்பாட்டுத் திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு.
- தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் (பூம்புகார்) மூலம் கைவினைஞர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு வகையான விருதுகள், சந்தை வாய்ப்புகள் மற்றும் கைவினைஞர்களின் சேர்க்கை முதலியவை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.

இந்த நடவடிக்கைகள் மூலம் தமிழக கைவினைப் பொருட்களை ஊக்குவிக்கவும் கைவினைஞர்களுக்கு ஆதரவு அளிக்கவும் அவர்களுக்கு சமுதாய நலத்திட்டங்கள் சென்றடையவும் வழிவகை காணப்பட்டுள்ளது.

## 9. கைவினைப் பொருட்களுக்கான புவிசார் குறியீடு

புவிசார் குறியீடு என்பது அறிவுசார் உடைமைகளைப் பாதுகாத்திடும் ஒரு கருவியாகும். இது கைவினைப் பொருட்களின் தனித்துவத் தரத்தினையும் ஒரு குறிப்பிட்ட புவிசார் நிலத்திலிருந்து தோன்றும் பொருட்களையும்

கண்டறிந்து அவற்றை அங்கீகரிப்பதாகும். இப்புவிசார் குறியீடு பெறப்படுவதால் போலியான பொருட்கள், அங்கீகாரம் பெறாத பொருட்கள் ஆகியவற்றைக் கண்டறிந்து உண்மையான பொருட்களை அவற்றிலிருந்து பாதுகாக்க முடிகிறது. மேலும் அதன் மூலம் அப்பொருட்களின் மரபு சார்ந்த கலாச்சார மதிப்பினை பாதுகாக்க முடிகிறது.

புவிசார் குறியீட்டுப் பதிவகத்தால் பின்வரும் தமிழ்நாட்டு கைவினைப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது:

1. நாச்சியார்கோயில் பித்தளை விளக்குகள்
2. பத்தமடை கோரைப்பாய்கள்
3. தோடா சித்திரத் தையல்
4. மாமல்லபுரம் கற்சிற்பங்கள்
5. சுவாமிமலை பஞ்சலோகச் சிலைகள்
6. வடசேரி கோயில் நகைகள்
7. தஞ்சாவூர் கலைத்தட்டுகள்
8. தஞ்சாவூர் ஓவியங்கள்



9. தஞ்சாவூர் பொம்மைகள்
10. கள்ளக்குறிச்சி மரச்சிற்பம்
11. கருப்பூர் கலம்காரி ஓவியம்
12. தஞ்சாவூர் நெட்டி வேலை
13. அரும்பாவூர் மரச்சிற்பம்
14. மயிலாடி கற்சிற்பம்

இந்தப் புவிசார் குறியீடு நம் கைவினைப் பொருட்களின் பாரம்பரியம் மற்றும் கலாச்சார மதிப்பைப் பேணிக்காப்பதோடு அப்பகுதியில் உள்ள தமிழ்நாட்டுக் கைவினைஞர்களின் படைப்புகள் உலகளாவிய சந்தையினை அணுகிட வாய்ப்பாக அமையும்.

மேலும் 10 வகையான தமிழ்நாட்டுக் கைவினைப்பொருட்களுக்கு புவிசார் குறியீடு அங்கீகாரம் பெறுவதற்கான பூர்வாங்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 10. மாமல்லபுரம் – ஓர் உலகக் கற்சிற்ப நகரம்

உலகக் கைத்திறக் குழுமம் (World Crafts Council) மாமல்லபுரத்தை "உலகக் கற்சிற்ப நகரம்" என்று அங்கீகரித்துள்ளது. மதிப்புமிக்க இந்த அங்கீகாரம் மாமல்லபுரத்தை சர்வதேச அளவில் நிலை உயர்த்தியுள்ளது. மேலும் செறிந்த கலாச்சார மரபிற்கும் கற்சிற்ப வேலைப்பாட்டிற்கும் தகுந்த அங்கீகாரத்தினை இது பெற்றுத் தந்துள்ளது. பூம்புகார் மற்றும் இந்திய கைத்திறக் குழுமம் (Craft Council of India) மேற்கொண்ட முயற்சியால் இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது.

## 11. நிறுவனத்தின் தொலைநோக்குப் பார்வை

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் கைவினைஞர்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல், புதிய சந்தைப்படுத்தும் வழிகளை ஆராய்தல் மற்றும் கைவினைஞர்களுக்கு நேரடி உதவி வழங்குதல் போன்ற பல்வேறு வளர்ச்சி நடவடிக்கைகளை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்துடன், சந்தை வரம்பினை விரிவுபடுத்துவதன் மூலமும், புதுமையான



உத்திகளைப் பின்பற்றுவதன் மூலமும் தனது சொந்த வணிகத்தினை வளர்ச்சியடைய செய்வதையும் இலட்சியமாகக் கொண்டுள்ளது. இந்நிறுவனம் கைவினைப் பொருட்களின் முக்கியத்துவத்தினைக் கண்டறிவதோடு அவற்றைப் பாதுகாத்து ஊக்குவித்தும் தமிழகக் கைவினைஞர்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும் தொடர்ந்து பாடுபடும்.

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

**"கதர் துணி மட்டுமே தடிமனான நூலில் இருந்து எளிதாக தயாரிக்கப்படுவதனால், கதரின் பயன்பாடு சுதேசியின் அடித்தளமாகும். கதர் பயன்படுத்துவதினால் மட்டுமே இலட்சக்கணக்கான ஏழை மக்கள் அவர்தம் இல்லத்திலேயே வேலை செய்து நேர்மையாக வாழ வழி வகுக்கிறது."**

**–மகாத்மா காந்தியடிகள்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியச் சட்டம், 1959–இன்படி, 1960–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. ஊரக வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கிராமப் பகுதிகளில் கதர் மற்றும் கிராமத் தொழில்களை அமைத்து அவற்றை ஊக்குவித்து மேம்படுத்துவது தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கிய நோக்கமாகும்.



### 1. நோக்கங்கள்

- கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல் மற்றும் அவர்களுக்கான வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்.
- உள்ளூரிலேயே கிடைக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சந்தைப்படுத்தக் கூடிய பொருட்களை உற்பத்தி செய்ய வழி வகுத்தல்.
- கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்தி அவர்கள் சுயசார்பு நம்பிக்கையினை அடைந்திட உதவுதல்.

### 2. நிருவாகம்

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைவர் ஆவார். அலுவல் சார் உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு: –

1. அரசு முதன்மைச் செயலாளர், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை.

2. அரசு இணைச் செயலாளர், நிதித்துறை.

3. தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

4. தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர்.

5. நிதிநிலை ஆலோசகர் மற்றும் தலைமைக் கணக்கு அலுவலர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

முக்கிய கொள்கை முடிவுகள் வாரிய உறுப்பினர்களால் மேற்கொள்ளப்படுகிறது. அன்றாட நடவடிக்கைகள் வாரிய தலைமைச் செயல் அலுவலரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியமானது, கதர் மற்றும் கிராமத் தொழில்கள் என இரண்டு முக்கிய பிரிவுகளை கொண்டு செயல்பட்டு வருகின்றது.

**3. நிலையான வளர்ச்சி இலக்குகள்**

ஐக்கிய நாடுகள் சபையில் 2015–ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 17 நிலையான வளர்ச்சி இலக்குகளில் இலக்கு "எட்டினை" அடையும் பொருட்டு கிராமப்புற பெண்களுக்கு



உகந்த வேலைவாய்ப்பினை வாரியம் வழங்கி வருகிறது.

**இலக்கு 8 – மதிக்கத்தக்க வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி**

**8.5. – உற்பத்தி திறனுடன் கூடிய வேலைவாய்ப்பை ஆண்கள் மற்றும் பெண்களுக்கு உருவாக்குதல்**

கிராமப்புற ஏழை மற்றும் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்குதல், சுற்றுச்சூழலுக்கு உகந்த விற்பனையாகக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல், கிராமப்புற ஏழை மக்களிடையே சமூக உணர்வினை மேம்படுத்தி சுயசார்பினை வளர்த்தல், கிராமப்புற கைவினைஞர்களை ஒருங்கிணைத்து அவர்களின் உற்பத்தி திறன் மற்றும் இலாபத்தினை மேம்படுத்துதல் ஆகியவை தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியச் சட்டம், 1959–இல் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய நோக்கங்களாகும்.

## 4. 2023–2024–ஆம் நிதியாண்டில் வாரியத்தால் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

- மழைக் காலத்தில் மண்பாண்டத் தொழிலாளர்களின் இன்னல்களை போக்கிட மழைக்காலப் பராமரிப்புத் தொகை, 8,886 மண்பாண்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.5,000/– வீதம் மொத்தம் ரூ.4,44,30,000/– வழங்கப்பட்டுள்ளது.

- மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு ரூ.1,42,44,300/– மதிப்பிலான 665 மின் விசைச் சக்கரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- நீலகிரி மாவட்டம் கோக்கால் மற்றும் திருச்சிக்கடி ஆகிய பகுதிகளிலுள்ள மண்பாண்டங்கள் செய்யும் கோத்தாஸ் பழங்குடியின மக்களுக்கு ரூ.3.00 இலட்சம் செலவில் 4 மண் அரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- 02.10.2023 அன்று நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவில் ஒரு சிறந்த



நூற்பாளர், ஒரு கதர் நெசவாளர் மற்றும் ஒரு பட்டு நெசவாளர் ஆகியோர்களை ஊக்கப்படுத்துவதற்காக தலா ரூ.25,000/– வீதம் ரொக்க பரிசும், பாராட்டு கேடயமும் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

- கோவை மாவட்டத்தில் உள்ள கோவை மெயின், ஆர்.எஸ்.புரம் கதரங்காடிகள் மற்றும் திண்டுக்கல் கதரங்காடி ஆகிய 3 கதர் அங்காடிகள் மக்களை கவரும் வண்ணம் ரூ.23.00 இலட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

- பட்டு நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 40 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.10.00 இலட்சம் செலவில் 40 புதிய தறிகள் வழங்கப்பட்டுள்ளன.

- பட்டு நெசவுப் பணி மேற்கொள்ளும் 100 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.8.00 இலட்சம் செலவில் தறி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 100 நெசவாளர்களுக்கு ரூ.7.00 இலட்சம் செலவில் தறி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் 02.10.2023 அன்று சென்னை, குறளகம் கதரங்காடியில் நடைபெற்ற காந்தி ஜெயந்தி விழாவின்போது ஒளி ஊடுருவல் சோப்பு (Transparent Soap), ஜவ்வாது வாசனை திரவியம் மற்றும் பூஜை பெட்டகம் அறிமுகம் செய்யப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் மற்றும் கதர் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்களால் 04.01.2024 அன்று கண்கவரும் லேபிள்களுடன் கூடிய கண்ணாடி பாட்டில்களில், ஜவ்வாது மலை, நீலகிரி



மலை போன்ற மலைப்பிரதேசங்களில் கொள்முதல் செய்யப்படும் தேன் "காதி மலைத்தேன்" (Khadi Hill Honey) எனும் பெயரில் அறிமுகம் செய்யப்பட்டு சிறப்பாக விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியில் உள்ள தேனீ விவசாயிகள் பயன்பெறும் விதத்தில் பச்சைத் தேன் கொள்முதல் விலையினை 01.04.2023 முதல் கிலோ ஒன்றுக்கு ரூ.140/–லிருந்து ரூ.155/– ஆக உயர்த்தி கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

**5. புதிய வணிக வளர்ச்சி முன்னெடுப்புகள்**

- தமிழ்நாடு சுற்றுலா மேம்பாட்டுக் கழக விடுதிகளுக்கு தேவைப்படும் சோப்பு மற்றும் ஷாம்பு ஆகிய பொருட்களை வழங்குவதற்கான விநியோக ஆணை பெறப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு காவல் துறையினரால் நடத்தப்படும் பல்பொருள் விற்பனை

அங்காடிகளுக்கு (Canteen) வாரியத்தின் கதர் தயாரிப்புகள் மற்றும் பனைப் பொருட்கள் விற்பனைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- சென்னை விமான நிலையத்தில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையங்களில் வாரியத்தின் தயாரிப்புகளும் விற்பனைக்காக தற்போது வைக்கப்பட்டுள்ளன.

- தேன், பனை வெல்லம், சுக்கு காபி தூள், பனை மிட்டாய் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்ட ஆவின் விற்பனை நிலையங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது.

- ஒரு மாவட்டம் ஒரு பொருள் (ODOP) திட்டத்தின்கீழ் அனைத்து காதி கிராப்ட்கள் மற்றும் இதர அங்காடிகளில் அம்மாவட்ட பிரசித்தி பெற்ற பொருட்களை பெற்று விற்பனை செய்வதற்கு கதர் வாரியம்



மற்றும் உற்பத்தியாளருக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- காலியாக உள்ள கதர் மற்றும் பனை வாரியங்களுக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் மூலம் வருவாய் ஈட்டிட அவற்றை குத்தகை/ வாடகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**6. கதர்**

இந்திய கலாச்சாரம் மற்றும் வாழ்வின் வழிமுறைகளை நிலை நிறுத்துவதோடு இந்திய கிராமங்களில் பொருளாதார வளர்ச்சிக்கும் கதர் ஒரு முன்மாதிரியாக விளங்குகிறது. கதர் துணிகள் இயற்கையானது, உறுதியானது என்பதுடன் இந்திய தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு உடலுக்கும், மனதிற்கும் இதம் மற்றும் குளிர்ச்சியை வழங்குகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தற்போது மாறிவரும் நவீன வணிக சந்தைக்கேற்ப ஆடை இரகங்களை தயாரித்து, உற்பத்தி அலகுகளை சிக்கனமான ரீதியில் இயக்கி, சந்தையிலுள்ள

நிறுவனங்களின் தயாரிப்புகளுக்கு நிகராக வணிகம் செய்து வருகிறது.

### 6.1. கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா

ஊரக மற்றும் கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு குறிப்பாக பெண்களுக்கு கதர் பட்டு மற்றும் பாலியஸ்டர் இரகங்கள் உற்பத்தியில் கைமுறை நூற்பு, நெசவு, சலவை மற்றும் சாயப் பணிகளின் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்க வழிவகை ஏற்படுத்துவது, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் முக்கிய பணிகளுள் ஒன்றாகும். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடத்தும் 24 கிராமிய நூற்பு நிலையங்களில் நூற்பு பணிகள் பெரும்பாலும் கிராமப்புற பெண்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், கதர் வாரியம் 14 கதர் உற்பத்தி உப கிளைகள் மூலம் சிட்டங்களை கோராத்துணி உற்பத்தி செய்வதற்காக நெசவாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இந்த கிராமிய நூற்பு நிலையங்கள் மற்றும் கதர் உற்பத்தி உப கிளைகள் மூலம் சுமார் 10,000 ஏழை எளிய நெசவாளர்களுக்கு குறிப்பாக கிராமப்புற பெண்களுக்கு நூற்றல், நெய்தல் போன்ற வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. கதர் மற்றும்



கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் சான்றளிக்கப்பட்ட 68 சர்வோதய சங்கங்களும் தமிழகத்தில் கதர் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனையின் மூலம் கிராமப்புற ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகின்றன.

2023–2024–ஆம் ஆண்டில் வாரியம் ரூ.469.53 இலட்சம் மதிப்புள்ள கதர் பருத்தி மற்றும் பாலிவஸ்திரா இரகங்களை உற்பத்தி செய்ததுடன் சர்வோதய சங்கங்களின் உற்பத்தி பொருட்களுடன் சேர்த்து ரூ.1,042.44 இலட்சம் மதிப்பிற்கு பொருட்களை விற்பனை செய்துள்ளது.

தற்போது பாலியஸ்டர் துணி வகைகள் மக்களிடையே பிரபலமாக உள்ளதால், சந்தையின் போக்கையும், வாடிக்கையாளர்களின் விருப்பத்தையும் கருத்தில் கொண்டு, கதர் கிராமத் தொழில் வாரியமும் பாலியஸ்டர் நூலுடன் பருத்தி பஞ்சினை முறையே 67:33 என்ற விகிதத்தில் கலந்து கதர் பாலியஸ்டர் துணிகளை உற்பத்தி செய்து வருகிறது.

வாரியத்தில் செயல்பட்டு வரும் கதர் உற்பத்தி அலகுகளின் விபரம் பின்வருமாறு:

### I. கதர் கிராமிய நூற்பு மையங்கள்

| வ.எண். | மாவட்டம் | அலகின் இருப்பிடம் |
|---|---|---|
| 1. | திருப்பூர் | பூளவாடி |
| 2. | | அவிநாசி |
| 3. | | வெள்ளக்கோயில் |
| 4. | | கொளத்துப்பாளையம் |
| 5. | ஈரோடு | காவிலிபாளையம் |
| 6. | | கெட்டிச்செவியூர் |
| 7. | சேலம் | விருத்தாசம்பட்டி |
| 8. | | நார்த்தம்பட்டி |
| 9. | கோயம்புத்தூர் | சூலூர் |
| 10. | திருச்சிராப்பள்ளி | கருங்குளம் |
| 11. | கரூர் | தென்னிலை |
| 12. | நாமக்கல் | நாமக்கல் |
| 13. | திண்டுக்கல் | சின்னாளப்பட்டி |
| 14. | புதுக்கோட்டை | திருவரங்குளம் |
| 15. | மதுரை | அன்னமார்பட்டி |
| 16. | சிவகங்கை | கண்டனூர் |
| 17. | விருதுநகர் | வன்னியம்பட்டி |
| 18. | | ஆர்.என்.பட்டி |
| 19. | | மங்காபுரம் |
| 20. | தென்காசி | பாவூர்சத்திரம் |
| 21. | | பெருமாள்பட்டி |
| 22. | கன்னியாகுமரி | அகஸ்தீஸ்வரம் |
| 23. | | தேவிகோடு |
| 24. | | மூதலாறு |



### II. கதர் நெசவு உப மையங்கள்

| வ.எண். | மாவட்டம் | அலகின் இருப்பிடம் |
|---|---|---|
| 1. | திருப்பூர் | பூளவாடி |
| 2. | | அவிநாசி |
| 3. | ஈரோடு | காவிலிபாளையம் |
| 4. | | கெட்டிச்செவியூர் |
| 5. | கோயம்புத்தூர் | சூலூர் |
| 6. | சேலம் | காட்டம்பட்டி |
| 7. | கரூர் | தென்னிலை |
| 8. | நாமக்கல் | நாமக்கல் |
| 9. | திண்டுக்கல் | சின்னாளப்பட்டி |
| 10. | மதுரை | உசிலம்பட்டி |
| 11. | சிவகங்கை | கண்டனூர் |
| 12. | விருதுநகர் | வத்திராயிருப்பு |
| 13. | தென்காசி | கீழப்பாவூர் |
| 14. | கன்னியாகுமரி | மார்த்தாண்டம் |

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், 2023–2024–ஆம் நிதியாண்டில் கதர் இரகங்களை உற்பத்தி செய்வதற்காக 1,116 நூற்பாளர்கள் மற்றும் 224 நெசவாளர்களை நேரடியாக பணிகளில் ஈடுபடுத்தியுள்ளது. கதர் அலகுகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை விற்பனை செய்ய "காதி கிராப்ட்" என்ற பெயரில் 40 விற்பனை நிலையங்களையும் வாரியம் நடத்தி வருகிறது.

கதர் வாரிய அலகுகளில் கடந்த மூன்று ஆண்டுகளில் நடைபெற்ற உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு: –

**(ரூ.இலட்சத்தில்)**

| **வருடம்** | **உற்பத்தி** | **விற்பனை** |
|---|---|---|
| 2021–2022 | 509.61 | 1,504.41 |
| 2022–2023 | 720.66 | 1,186.20 |
| 2023–2024 | 469.53 | 1,042.44 |

## 6.2. கதர் பட்டு

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் உற்பத்தி செய்யப்படும் பட்டு இரகங்களுக்கு மத்திய பட்டு வாரியத்தின் "சில்க் மார்க்" முத்திரை பெற்றுள்ள இப்பட்டு புடவைகள் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளன.

வாரியம் மூலம், 277 பட்டு நெசவாளர்களுக்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள கதர் பட்டு உப கிளைகள் மூலம் ஆண்டு முழுவதும் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது:



| **வ.எண்** | **மாவட்டம்** | **நெசவு மையம்** |
|---|---|---|
| 1. | தஞ்சாவூர் | கும்பகோணம் |
| 2. | | கபிஸ்தலம் |
| 3. | திண்டுக்கல் | நரிக்கல்பட்டி |
| 4. | சேலம் | சேலம் |
| 5. | | தாரமங்கலம் |
| 6. | கோயம்புத்தூர் | வடவள்ளி |

கடந்த மூன்று ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பட்டு இரகங்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு: –

**(ரூ. இலட்சத்தில்)**

| **வருடம்** | **உற்பத்தி** | **விற்பனை** |
|---|---|---|
| 2021–2022 | 172.97 | 629.03 |
| 2022–2023 | 496.65 | 657.29 |
| 2023–2024 | 498.61 | 526.81 |

## 6.3. கதர் நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலத்திட்டங்கள்

### 6.3.1. நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நல நிதி

நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கான நலநிதியினை வாரியம் கட்டமைத்துள்ளது. நூற்போர் மற்றும் நெசவாளர்களது (கைவினைஞர்கள்)

கூலியிலிருந்து 12% தொகை இந்நலநிதிக்கு வழங்கப்படுகிறது. அதற்கு ஈடான பங்குத் தொகையை வாரியம் இந்நிதிக்கு வழங்குகிறது. இந்நிதியிலிருந்து நூற்போர் மற்றும் நெசவாளர்களின் கோரிக்கைக்கு ஏற்றவாறு பண்டிகை காலங்களில் அவர்களது கணக்கில் உள்ள இருப்புத் தொகைக்கு ஏற்ப நிதி உதவியும், ஓய்வு பெறும் பொழுது அவர்களது கணக்கில் உள்ள முழுத் தொகையும் வழங்கப்படுகிறது. மேலும், நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்காக வழங்கும் கூலியுடன் கூடுதலாக 10% கூலித்தொகை, ஊக்குவிப்புத் தொகையாக வாரியம் வழங்கி வருகிறது.

### 6.3.2. கதர் நூற்போர் மற்றும் நெசவாளர் நல வாரியம்

அரசாணை (நிலை) எண்.120 மற்றும் 52, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, நாள் 26.08.2010 மற்றும் 30.03.2012–இன்படி, நூற்போர் மற்றும் நெசவாளர்களின் நலனுக்காக நலவாரியம் ஆரம்பிக்கப்பட்டு கதர் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களில் பணிபுரியும் நூற்பாளர்கள் மற்றும் நெசவாளர்களுக்கு நல உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.



இதற்கென இவ்வாரியத்திற்கு தொகுப்பு நிதியாக ரூ.100.00 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை 8,678 நபர்கள் நூற்போர் மற்றும் நெசவாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர்.

இந்நல வாரியத்தால் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் விவரங்கள் பின்வருமாறு:–

| வ. எண். | | உதவிகளின் விவரம் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | விபத்து ஈட்டுறுதி திட்டம் | | |
| | a. | விபத்தினால் மரணம் ஏற்பட்டால் | 1,00,000/– |
| | b. | விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | 10,000/– முதல் 1,00,000/– வரை |
| 2. | இயற்கை மரணத்திற்கான உதவித் தொகை | | 15,000/– |
| 3. | ஈமச்சடங்கு செலவு | | 2,000/– |
| 4. | கல்வி உதவித் தொகை | | |
| | a. | 10–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | b. | 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,000/– |
| | c. | 11–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,000/– |
| | d. | 12–ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைகளுக்கு | 1,500/– |

| வ. எண். | உதவிகளின் விவரம் | | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| | e. | 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | 1,500/– |
| | f. | முறையான பட்டப் படிப்பிற்கு | 1,500/– |
| | | விடுதி வசதியுடன் முறையான பட்டப் படிப்பிற்கு | 1,750/– |
| | g. | முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 2,000/– |
| | | விடுதி வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்பிற்கு | 3,000/– |
| | h. | தொழில் கல்வி பட்டப் படிப்பிற்கு | 2,000/– |
| | | விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்டப் படிப்பிற்கு | 4,000/– |
| | i. | தொழில் கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 4,000/– |
| | | விடுதி வசதியுடன் தொழில் கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | 6,000/– |
| | j. | ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்பிற்கு | 1,000/– |
| | | விடுதி வசதியுடன் ஐ.டி.ஐ. தொழிற்பயிற்சி படிப்பிற்கு | 1,200/– |
| **5.** | | **திருமண உதவித் தொகை** | 2,000/– |
| **6.** | | **மகப்பேறு உதவித் தொகை** | |
| | a. | மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் (மகப்பேறுக்கு முன் 3 மாதங்கள், மகப்பேறுக்குப் பின் 3 மாதங்கள்) | 6,000/– |
| | b. | கருக்கலைப்பு/கருச்சிதைவு | 3,000/– |
| **7.** | | **மூக்குக் கண்ணாடி செலவுத் தொகையை ஈடுசெய்தல்** | 500/– வரை |
| **8.** | | **முதியோர் ஓய்வூதியம் (மாதந்தோறும்)** | 1,000/– |



2010–2011 முதல் 2023–2024 முடிய, மொத்தமாக 1,294 நூற்போர் மற்றும் நெசவாளர்களுக்கு ரூ.67.98 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

## 7. மண்பாண்டத் தொழிலாளர்களுக்கான நலத் திட்டங்கள்

கிராமப்புற தொழிலாளர்களுக்கு வருவாய் ஈட்டும் தொழிலாக மண்பாண்டத் தொழில் விளங்கி வருகிறது. வாரியத்தின் கட்டுப்பாட்டில் 33 மண்பாண்டத் தொழில் கூட்டுறவு சங்கங்கள் 3,816 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் தெரிவு செய்யப்பட்ட மண்பாண்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மழைக்கால பராமரிப்புத் தொகையாக ஆண்டொன்றிற்கு தலா ரூ.5,000/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது. 2023–2024–ஆம் ஆண்டில் மழைக்காலத்தில் 8,886 பயனாளிகளுக்கு ரூ.4.44 கோடி பராமரிப்புத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இவை தவிர, 6,665 மண்பாண்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு மின்சாரத்தால் இயங்கும்

மண்பாண்ட சக்கரங்கள் இதுவரை வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில், மேலும், 1,510 சக்கரங்கள் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

## 8. வணிக அபிவிருத்தி நிதியுதவி (MDA)

### 8.1. கதர் கிராமத் தொழில்கள் ஆணையம்

கதர் உற்பத்தி மற்றும் விற்பனையை ஊக்குவிப்பதற்காக 2010–2011–ஆம் ஆண்டில் கதர் கிராமத் தொழில்கள் ஆணையத்தால் வணிக அபிவிருத்தி நிதியுதவி (MDA) திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கதர் ஆணையத்தால் கதர், பாலிவஸ்திரா மற்றும் பட்டு உற்பத்தியின் பிரதான செலவின மதிப்பில் 30 விழுக்காடு வணிக அபிவிருத்தி நிதியுதவியாக (MDA) கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கூறிய 30 விழுக்காடு ஊக்கத் தொகையில், 40 விழுக்காடு தொகை நூற்போர் நெசவாளர் மற்றும் கைவினைஞர்களுக்கு ஊக்கக் கூலித் தொகையாக வழங்கப்படுகிறது. இத்தொகையானது மின்னணு



தீர்வை முறையில் நேரடியாக தனிநபரின் வங்கிக் கணக்கிற்கு ஒவ்வொரு காலாண்டிலும் செலுத்தப்படுகிறது. இவ்விவரங்கள் கதராணைக் குழுவின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. மீதமுள்ள 60 விழுக்காடுத் தொகை சர்வோதய சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது. கதர் கிராமத் தொழில் வாரியத்தால் பெறப்பட்ட வணிக அபிவிருத்தி நிதியுதவி விவரம் பின்வருமாறு:

| வருடம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 2021–2022 | 163.80 |
| 2022–2023 | 301.89 |
| 2023–2024 | 290.44 |

### 8.2. மாநில அரசு

தமிழ்நாடு அரசால், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் சர்வோதய சங்கங்களுக்கு கதர் இரகங்களின் உற்பத்தி மதிப்பின் அடிப்படையில் 20% தொகை வணிக அபிவிருத்தி நிதியுதவியாக வழங்கப்படுகிறது. 2023–2024–ஆம் நிதியாண்டில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு

ரூ.4.00 கோடியும், சர்வோதய சங்கங்களுக்கு ரூ.16.50 கோடியும் நிதியுதவியாக மாநில அரசு வழங்கியுள்ளது.

### 9. கிராமத் தொழில்கள்

ஊரகப் பகுதிகளில் கிடைக்கும் மூலப்பொருட்கள் மற்றும் மனிதவளத்தைப் பயன்படுத்தி சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் கிராமப்புற வறுமையைப் போக்க கிராமத் தொழில் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குறைந்த மூலதன முதலீட்டில் அதிகளவிலான வேலைவாய்ப்பு என்பது கிராமத் தொழில் திட்டத்தின் தனிச்சிறப்பாகும். இவ்வாரியம் தச்சு மற்றும் கருமாரத் தொழில், தோல் பொருட்கள் உற்பத்தி, சோப்பு உற்பத்தி, கைமுறைக் காகித உற்பத்தி, மண்பாண்டங்கள் மற்றும் தேனீ வளர்ப்பு போன்ற பல்வேறு தொழில்களை ஊக்குவித்து வருகிறது.

### 9.1. சோப்பு தொழில்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத் தொழில்களுள், முதன்மையான மற்றும் இலாபகரமான தொழில்களில் சோப்புத் தொழிலும்



ஒன்றாகும். வாரியத்தின்கீழ் 6 குளியல் சோப்பு அலகுகள், ஒரு திரவ சலவை சோப்பு அலகு மற்றும் ஒரு டிடர்ஜெண்ட் சோப்பு அலகு ஆகியவை கீழ்க்காணும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன:

**I – குளியல் சோப்பு அலகுகள்**

| வ.எண். | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | செங்கல்பட்டு | திருக்கழுக்குன்றம் |
| 2. | | மாமண்டூர் |
| 3. | திருச்சி | சமயபுரம் |
| 4. | ஈரோடு | மொடக்குறிச்சி |
| 5. | சிவகங்கை | கண்டனூர் |
| 6. | கன்னியாகுமரி | மயிலாடி |

**II – திரவ சலவை சோப்பு அலகு**

| வ.எண். | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் | பூண்டி |

**III – டிடெர்ஜென்ட் சோப்பு அலகு**

| வ.எண். | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | கடலூர் | பண்ருட்டி |

சோப்பு அலகுகளில் குமரி, மூலிகா, குறிஞ்சி, நித்தம், வேம்பு, சந்தனம், கார்பாலிக், சுகந்தம் மற்றும்

ஜவ்வாது போன்ற குளியல் சோப்பு வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. வாடிக்கையாளர்களை கவரும் வண்ணம் வடிவமைக்கப்பட்ட காம்போ பேக்கில் 75 கிராம் சோப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது. சென்ற ஆண்டில் குமரி சோப்பு மட்டுமே சுமார் ரூ.1,200.00 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், கிளீனிங் பவுடர், டிடர்ஜெண்ட் சோப்பு, டிடர்ஜெண்ட் சலவைத் தூள் மற்றும் பார் சோப்பு போன்றவைகள் உற்பத்தி செய்யப்பட்டு "கோபுரம்" என்னும் வணிகக் குறியீட்டுடன் விற்பனை செய்யப்படுகின்றன.

2023–2024–ஆம் நிதியாண்டில், ரூ.1,716.81 இலட்சம் மதிப்பிலான சோப்பு பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.1,780.93 இலட்சம் மதிப்பில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 10. தச்சு மற்றும் கருமாரத் தொழில்

தச்சு மற்றும் கருமாரத் தொழில் அலகுகளும் கிராமப்புற கைவினைஞர்களுக்கு அதிகளவில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி தருகின்றன. வாரியத்தின்கீழ் நான்கு தச்சு மற்றும் கருமார



அலகுகள் கீழ்க்கண்ட இடங்களில் இயங்கி வருகின்றன:

| வ.எண் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | இராணிப்பேட்டை | அரக்கோணம் |
| 2. | வேலூர் | பள்ளிகொண்டா |
| 3. | சிவகங்கை | கண்டனூர் |
| 4. | திருநெல்வேலி | பேட்டை |

மரம் மற்றும் இரும்பினாலான தளவாடங்கள் இந்த அலகுகளில் உற்பத்தி செய்யப்பட்டு அரசுத் துறைகள், நிறுவனங்கள், நீதிமன்றங்கள், இந்து சமய அறநிலையத் துறை, பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் மாவட்ட நூலகங்களுக்கு அவற்றின் தேவையின் அடிப்படையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

மண்பாண்ட தொழிலாளர்களின் உற்பத்தி திறனை அதிகரித்திட பல்வேறு வேக சுழற்சியுடன் செயல்படக் கூடிய மின்விசை மண்பாண்டச் சக்கரங்கள் இந்த அலகுகளில் உற்பத்தி செய்யப்பட்டு அரசால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2023–2024–ஆம் நிதியாண்டில், ரூ.763.33 இலட்சம் மதிப்பிலான மரம் மற்றும் இரும்பு தளவாடங்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.763.08 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**11. காலணி தொழில்**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மேற்கொண்டுள்ள தொழில்களுள் மிகவும் பழமை வாய்ந்தது காலணித் தொழில் ஆகும். வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் நான்கு காலணி உற்பத்தி அலகுகள் பின்வரும் இடங்களில் செயல்பட்டு வருகின்றன:

| வ.எண். | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | திருவள்ளூர் | அம்பத்தூர் |
| 2. | சேலம் | சேலம் |
| 3. | திருநெல்வேலி | பாளையங்கோட்டை |
| 4. | கன்னியாகுமரி | நாகர்கோவில் |

அரசுத் துறைகளுக்குத் தேவையான கோப்புப் பெட்டிகள், மருத்துவமனைகளுக்கான ரப்பரைஸ்டு காயர் மெத்தைகள் மற்றும் காலணிகள், நடத்துனர் பணப்பைகள், கையுறைகள் மற்றும்



உள்ளாட்சி ஊழியர்களுக்கான காலணிகள் ஆகியவை இவ்வலகுகளில் சிறந்த முறையில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2023–2024–ஆம் நிதியாண்டில், ரூ.123.73 இலட்சம் மதிப்பிலான தோல் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.109.67 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**12. கைமுறை காகித அலகுகள்**

விழுப்புரம் மாவட்டத்தில் பிடாகம், கடலூர் மாவட்டத்தில் வடலூர், திருப்பூர் மாவட்டத்தில் திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் செண்பகப்புதூர் ஆகிய நான்கு இடங்களில் கைமுறை காகித அலகுகள் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இவ்வலகுகளில் கச்சா அட்டைகள், கோப்பு அட்டைகள், அட்டைப் பெட்டிகள் மற்றும் எழுது தாட்கள் உள்ளிட்ட இரகங்கள் உற்பத்தி செய்யப்பட்டு சிறைத்துறை, அரசு மருத்துவமனைகள், நீதிமன்றங்கள் மற்றும் இதர அரசுத்துறைகளுக்கு

அவற்றின் தேவை அடிப்படையில் விற்பனை செய்யப்படுகின்றன.

2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.51.76 இலட்சம் மதிப்பிலான கைமுறை காகிதப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.37.64 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 13. தேனீ வளர்ப்புத் தொழில்

### 13.1. காதி தேன்

தேனீ வளர்ப்புத் தொழில் என்பது கிராமத் தொழில்களில் முக்கிய பங்கு வகிக்கிறது. தேனீ வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமார் 12,000 தேனீ விவசாயிகளிடமிருந்து பச்சைத் தேனை, வாரியம் நேரிடையாக கொள்முதல் செய்கிறது. 01.04.2023 முதல் பச்சைத் தேன் கொள்முதல் விலை கிலோ 1–க்கு ரூ.140/–லிருந்து ரூ.155/–ஆக உயர்த்தப்பட்டு, கொள்முதல் செய்யப்படும் தேனிற்கான தொகை அவர்களின் வங்கி கணக்குகளில் நேரடியாக செலுத்தப்பட்டு வருகிறது.



கொள்முதல் செய்யப்பட்ட பச்சைத் தேன் கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் அருகிலுள்ள அம்சி தேன் பதப்படுத்தும் நிலையத்தில் பதப்படுத்தப்பட்டு, தரம் பரிசோதிக்கப்பட்டு, "அக்மார்க்" சான்றுடன் கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.80.86 இலட்சம் மதிப்புள்ள பச்சைத் தேன் பதப்படுத்தப்பட்டு ரூ.147.27 இலட்சம் மதிப்புள்ள தேன் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 13.2. மதிப்புக் கூட்டப்பட்ட தேன் பொருட்கள்

**"காதி தேன்"** பொதுமக்களிடையே மிகவும் பிரசித்தி பெற்றுள்ளது. தேனுடன் ஆரோக்கியத்திற்கு உகந்த பொருட்களான அத்திப்பழம், பேரீட்சை, நெல்லி, வால்நட் மற்றும் உலர் பழங்கள் ஆகியவற்றை சேர்த்து 400 கிராம் முதல் 450 கிராம் வரையிலான அளவுகளில் மதிப்புக்கூட்டப்பட்ட தேனாக விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மலைவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் பொருட்டு, அவர்களிடமிருந்து மலைத்தேன் கொள்முதல் செய்யப்பட்டு பின்

பதப்படுத்தி கதரங்காடிகள் மூலம் "காதி மலைத்தேன்" எனும் பெயரில் 2023–2024–ஆம் ஆண்டு முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. காதி மலைத்தேன் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

## 14. இதர கிராமத் தொழில் அலகுகள்

### 14.1. ஜவ்வாது அலகு, வேடப்பட்டி

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள வேடப்பட்டியில் ஜவ்வாது பவுடர், சாம்பிராணி, மெழுகுவர்த்திகள், கற்பூரம், பன்னீர், சந்தன மாலைகள், பல்பொடி மற்றும் இதர பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவ்வலகில் புதிதாக ஜவ்வாது வாசனை திரவியம் மற்றும் **"பூஜை கிப்ட் பாக்ஸ்"** ஆகியவை பொது மக்கள் பயன்பெறும் வகையில் 2023–2024–ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிவகங்கை மாவட்டம் கண்டனூரில் **"சாரல்"** ஷாம்பு, **"வைகை"** கைகழுவும் திரவம், **"எழில்"** குளியல் திரவம் மற்றும் திரவ டிடெர்ஜெண்ட் சோப்பு ஆகிய திரவ சோப்பு வகைகள் மட்டுமின்றி அகர்பத்தி மற்றும் சந்தன மாலைகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.



**"சுகப்பிரியா"** என்ற பெயரில் தூய யூகலிப்ட்ஸ் தைலத்தினை பிரதான மூலப் பொருளாகக் கொண்டு செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள மாமண்டூர் அலகில் வலி நிவாரணி தைலம் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வலி நிவாரண தைலத்திற்கு பொது மக்களிடையே நல்லதொரு வரவேற்பு உள்ளது.

2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.87.38 இலட்சம் மதிப்பிற்கு இதரப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.161.92 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 15. வணிகம்

### 15.1. கதர் அங்காடிகள்

வாரியத்தின் பல்வேறு அலகுகளில் உற்பத்தி செய்யப்படும் கதர் கிராமப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு தமிழ்நாடு முழுவதும் **"காதி கிராப்ட்"** என்ற பெயரில் 40 விற்பனை அங்காடிகள் செயல்பட்டு வருகின்றன.

## 15.2. ஒரு மாவட்டம் ஒரு பொருள் விற்பனை (ODOP)

ஒவ்வொரு மாவட்டத்திலும் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படும் தனித்துவமான கிராமத் தொழில் பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்களை மகளிர் சுய உதவி குழுக்கள் (SHGs), மகளிர் குழுக்களின் கூட்டமைப்புகள் (PLFs), உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் (FPOs), பிரதம மந்திரியின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் பயனாளிகள் (PMEGP) மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து கதர் அங்காடிகள் மற்றும் சர்வோதய சங்கங்கள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதற்காக திருப்பூரில் மத்திய கிடங்கு ஒன்று துவக்கப்பட்டு அங்கிருந்து அனைத்து கதரங்காடிகளுக்கும் ODOP பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

வாரியத்தால் 05.02.2023 அன்று இத்திட்டம் துவக்கப்பட்டு அனைத்து கதரங்காடிகள் மற்றும் சர்வோதய சங்கங்களின் மூலம் இதுவரையிலும் ரூ.474.62 இலட்சம் மதிப்பிலான பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.



## 15.3. இணைய வழி விற்பனை

கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களின் இணைய வழி விற்பனையை அதிகரிக்க கதர் கிராமத் தொழில் வாரியத்தால் www.tnkvib.org மற்றும் www.tnkhadi.com ஆகிய இரண்டு இணைய தளங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், இளைய தலைமுறையினரைக் கவரும் வகையில் ஆண்ட்ராய்டு (Android) மற்றும் iOS தளங்களில் செயல்படும் "tnkhadi" எனும் கைபேசி செயலியும் அறிமுகப்படுத்தப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது.

மேலும் அமேசான் (Amazon), பிளிப்கார்ட் (Flipkart) மற்றும் ONDC போன்ற மின்னணு வணிகத் (e–Commerce) தளங்கள் வாயிலாகவும் கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

## 15.4. தனி உரிமைக் கிளைகள் (Franchise)

தனிநபர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களை விற்பனை செய்யவும் வாடிக்கையாளர்களுக்கு தங்களது இருப்பிடத்தின் அருகிலேயே வாரிய

பொருட்கள் கிடைத்திடும் வகையிலும் தனி உரிமைக் கிளைகள் அமைக்க கீழ்க்கண்ட இடங்களில் உரிமம் வழங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன:

| வ.எண் | மாவட்டம் | இடம் |
|---|---|---|
| 1. | காஞ்சிபுரம் | ஸ்ரீ பெரும்புதூர் |
| 2. | திருச்சி | சமயபுரம் |
| 3. | திருச்சி | திருவெறும்பூர் |
| 4. | நாமக்கல் | கொல்லிமலை |
| 5. | திருப்பூர் | திருப்பூர் |
| 6. | திருநெல்வேலி | பாளையங்கோட்டை |
| 7. | நாகர்கோவில் | எடக்கால்குடி |
| 8. | திருச்சி | திருப்பட்டூர் |

### 15.5. கண்காட்சி மற்றும் விற்பனை

அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், கல்லூரி மாணவர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் மத்தியில் கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களை பிரபலப்படுத்துவதற்கு அரசு அலுவலகம் மற்றும் கல்லூரி வளாகங்களில் கண்காட்சி மற்றும் விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் வருடந்தோறும் சென்னை, குறளகம் பிரதான கதரங்காடியில் கொலு பொம்மைகள் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2023–2024–ஆம் ஆண்டில்



ரூ.110.30 இலட்சம் மதிப்பிலான கொலு பொம்மைகள், கதர் கிராமப் பொருட்கள், டெரகோட்டா பொம்மைகள், கைவினைப் பொருட்கள் மற்றும் பீங்கான் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 16. தொழில் கூட்டுறவு சங்கங்கள்

166 தொழில் கூட்டுறவு சங்கங்கள் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றன.

வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலர், இத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயற்பதிவாளர் ஆவார். இத்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகள் கூட்டுறவு தணிக்கைத் துறையால் தணிக்கை செய்யப்பட்டு வருகிறது.

2023–2024–ஆம் நிதியாண்டில் இச்சங்கங்களால் ரூ.2,411.61 இலட்சத்திற்கு உற்பத்தி செய்யப்பட்டு ரூ.3,490.07 இலட்சத்திற்கு பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 17. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

ஒன்றிய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறையின்கீழ் பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம், 2008–2009–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது, ஒன்றிய கதர் கிராமத் தொழில்கள் ஆணையம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், தொழில் மற்றும் வணிகத் துறை மற்றும் தென்னை நார் வாரியம் ஆகிய துறைகளின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

2022–2023–ஆம் ஆண்டிலிருந்து உற்பத்தித் துறையில் ரூ.50.00 இலட்சம் மற்றும் சேவைத் துறையில் ரூ.20.00 இலட்சம் வரை பயனாளிகளுக்கு வங்கி கடன் வழங்கப்பட்டு வருகிறது. பயனாளிகளின் குறைந்தபட்ச கல்வி தகுதியாக சேவை துறையில் ரூ.5.00 இலட்சத்திற்கு மேல் உள்ள திட்ட மதிப்பீட்டிற்கும், உற்பத்தி துறையில் ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் உள்ள திட்ட மதிப்பீட்டிற்கும் 8–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.



2023–2024–ஆம் நிதியாண்டில், 791 அலகுகள் மூலம் ரூ.2,606.15 இலட்சம் விளிம்பு தொகை ஒப்பளிப்பு அளிக்கப்பட்ட காரணத்தால் 8,701 நபர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பட்டது.

### 17.1. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட / விரிவுபடுத்தப்பட்ட கடன் வசதி

பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தில், 2018–2019–ஆம் ஆண்டு முதல் ஏற்கெனவே மானியம் பெற்று திறம்பட செயல்பட்டுக் கொண்டிருக்கும் பழைய அலகுகளுக்கு, தங்களுடைய அலகினை விரிவுபடுத்தவும், நவீனமயமாக்கவும் மீண்டும் ஒருமுறை கடன் தொகை கொடுத்து உதவிடும் திட்டத்தை ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்காகவே PMEGP மின்னணு (e–Portal) வலைத்தளத்தில் தனிப் பகுதி உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் உற்பத்தி சார்ந்த தொழில்களுக்கு ரூ.1.00 கோடி வரையிலும் மற்றும் சேவை சார்ந்த தொழில்களுக்கு ரூ.25.00 இலட்சம்

வரையிலும் கடன் தொகை அனுமதிக்கப்படும். மேலும், அனைத்து பிரிவினருக்கும் திட்ட மதிப்பீட்டில் பயனாளியின் சொந்த முதலீடு 10% ஆகவும், வங்கி கடன் 90% ஆகவும் நிர்ணயிக்கப்பட்டு மொத்த திட்ட மதிப்பீட்டில் மானிய தொகையாக 15% வழங்கப்படும்.

## 18. கதர் கிராமப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் 2022–2023 மற்றும் 2023–2024 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கதர் கிராமப் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் பின்வருமாறு:–

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண். | தொழில் | 2022–2023 | | 2023–2024 (தணிக்கைக்கு முன்பு) | |
|---|---|---|---|---|---|
| | | உற்பத்தி | விற்பனை | உற்பத்தி | விற்பனை |
| 1. | கதர் | 1,217.31 | 1,843.49 | 968.14 | 1,569.25 |
| 2. | கிராமத் தொழில்கள் | | | | |
| | அ. சோப்பு | 1,404.71 | 1,546.79 | 1,716.81 | 1,780.93 |
| | ஆ. தச்சு மற்றும் கருமாரம் | 465.00 | 470.00 | 763.33 | 763.08 |
| | இ. தோல் பொருட்கள் | 101.44 | 115.89 | 123.73 | 109.67 |
| | ஈ. கைமுறைக் காகிதம் | 49.22 | 82.01 | 51.76 | 37.64 |
| | உ. தேனீ வளர்ப்பு | 116.96 | 155.69 | 80.86 | 147.27 |
| | ஊ. இதர தொழில்கள் | 186.80 | 601.45 | 87.38 | 161.92 |
| | எ. ஒரு மாவட்டம் ஒரு பொருள் | -- | 51.20 | -- | 474.62 |
| 3. | தொழில் கூட்டுறவு சங்கங்கள் | 2,032.96 | 2,991.10 | 2,411.61 | 3,490.07 |
| | **மொத்தம்** | **5,574.40** | **7,857.62** | **6,203.62** | **8,534.45** |



## 19. அரசிடமிருந்து பெறப்படும் நிதியுதவி

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கவும், காதி பொருட்களுக்கு வணிக அபிவிருத்தி நிதியுதவி வழங்கவும் தேவையான நிதியுதவியை மாநில அரசு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்கி வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் ஆகியவற்றிற்கு 2024–2025–ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியுதவி விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | விவரம் | | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான மானியம் | | 10,141.18 |
| 2. | தள்ளுபடி மானியம் | கதர் வாரியத்திற்கு | 400.00 |
| | | சான்றளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு | 2,200.00 |
| 3. | தணிக்கை கட்டணம் | | 298.45 |
| 4. | கிராமத் தொழில் மேம்பாட்டிற்கான உதவி | | 0.02 |
| 5. | தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம் | | 0.01 |
| 6. | கதர் நூல் நூற்போர் மற்றும் நெசவாளர் நலவாரியம் | | 0.01 |
| 7. | மண்பாண்ட தொழிலாளர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை | | 571.50 |
| 8. | மண்பாண்ட தொழிலாளர்களுக்கு மின்விசைச் சக்கரங்கள் வழங்குதல் | | 0.01 |
| | | மொத்தம் | **13,611.18** |



## தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம், 1994–ஆம் ஆண்டின் தமிழ்நாடு சட்டம், 15–இன்கீழ் தோற்றுவிக்கப்பட்டு, 06.01.1995 முதல் சென்னையை தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இவ்வாரியத்தின் கட்டுப்பாட்டில், 310 தொடக்க பனை வெல்ல உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட அளவில் 8 மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனங்கள் மற்றும் மாநில அளவில் தமிழ்நாடு மாநில பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையம் ஆகியன செயல்பட்டு வருகின்றன.

### 1. நோக்கங்கள்

- பனைத் தொழிலாளர்களுக்கு உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் கிடைத்திட உதவி புரிதல்.
- பனை பொருட்களை விற்பனை மற்றும் சந்தைப்படுத்த வழிவகைகள் ஏற்படுத்துதல்.

- நவீன தொழில்நுட்பத்தைக் கொண்டு சிறந்த பனை பொருட்களை உருவாக்க தேவையான உபகரணங்கள் மற்றும் பயிற்சி அளித்தல்.
- உற்பத்தி மற்றும் விற்பனை அதிகரிக்க பனைத் தொழிலாளர்களை உள்ளடக்கிய ஆரம்ப கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துதல்.
- பனைத் தொழிலாளர்களின் உற்பத்தி மற்றும் வருமானம் அதிகரிக்க உதவி புரிதல்.

## 2. நிருவாகம்

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் பணியாளர்கள் அனைவரும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் பணியமைப்பிலிருந்து அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இவ்வாரியத்தின் தலைவராக மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உள்ளார்கள். தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலரே, தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின்



கட்டுப்பாட்டில் உள்ள ஆரம்ப பனை வெல்ல உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட மற்றும் மாநில பனை வெல்ல விற்பனை கூட்டுறவு சம்மேளனங்கள் ஆகியவற்றிற்கு செயற்பதிவாளர் ஆவார்.

வாரியத்தின் இதர அலுவல் சார் உறுப்பினர்களின் விவரம் பின்வருமாறு:–

1. அரசு முதன்மைச் செயலாளர்,
   கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை.
2. தலைமைச் செயல் அலுவலர்,
   தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.
3. கூடுதல் காவல் துறை இயக்குநர் (மதுவிலக்கு மற்றும் கலால்).
4. அரசு இணை இயக்குநர், நிதி(BPE)த் துறை.
5. தலைமைச் செயல் அலுவலர் (அலுவலால்),
   தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்.

**3. வரவு – செலவு**

தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கென தனி வரவு செலவு திட்டம் ஏதுமில்லை.

**4. பதநீர் இறக்குவதற்கான உரிமம்**

ஒவ்வொரு நிதியாண்டிலும் பதநீர் இறக்குவதற்கான உரிமங்களை வழங்கவும் புதுப்பிக்கவும் தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

2023–2024–ஆம் நிதியாண்டில் 9,350 பனைத் தொழிலாளர்களுக்கு பதநீர் இறக்கவும் அதனை விற்பனை செய்யவும் உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

**5. 2023–2024–ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்**

- பனைத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்யும் பனைப் பொருட்களை சந்தைப்படுத்தும் பொருட்டு 10 மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் பனை பொருள் விற்பனை



கூடங்கள் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு மாற்றுத்– திறனாளிகளுக்கும், மகளிருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் கடலூர் கிளையில் உள்ள கட்டிடத்தில் பனைவெல்லம் இருப்பு வைப்பதற்காக ஈரப்பதத்தை குறைக்கும் கருவி மற்றும் இதர வசதிகள் கொண்ட ஒரு சேமிப்பு கிடங்கு ரூ.7.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை கிளையில் உள்ள பழுதடைந்த கட்டிடம் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைத்து பயிற்சி கூடமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இதனில், பனை நார் தூரிகைகள் செய்வதற்கான பயிற்சி வழங்கப்பட்டு தொடர்ந்து வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது.

- பனை மேம்பாட்டு இயக்ககத்தின்கீழ் ரூ.66.00 இலட்சம் மதிப்பில் 22 இலட்சம் தரமான பனை விதைகளை மாநில இணையத்தின் கிளைகள் மற்றும் மாவட்ட சம்மேளனங்கள் மூலம் 100% மானியத்தில் கொள்முதல் செய்யப்பட்டு பனை மரம் வளர்க்க விரும்பும் விவசாயிகளுக்கு தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் மூலம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியத்தின் மூலம் தூத்துக்குடி மாவட்டம், வீரபாண்டியபட்டிணத்தில் தரமான பனை வெல்லம் உற்பத்தி செய்திட ஏதுவாக ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது பயன்பாட்டு மையம் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது.



- 100 மகளிருக்கு பனை ஓலைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சியும் உபகரணங்களும் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் அளிக்கப்பட்டுள்ளது.

- இராமநாதபுரம் – சிவகங்கை மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின்கீழ் செயல்படும் சாயல்குடி தொழிற்கூடத்தில் பனை சார்ந்த மதிப்பு கூட்டுப் பொருட்களான பனங்கேக், பனைவெல்ல அல்வா, ரொட்டி வகைகள், பனங்கற்கண்டு மிட்டாய் மற்றும் பனங்கிழங்கு மாவு போன்றவைகளை தயாரிப்பதற்குத் தேவைப்படும் உபகரணங்கள், பாத்திரங்கள், அரவை இயந்திரம், பேக்கிங் மெஷின், அச்சுகள் மற்றும் உலை அடுப்பு ஆகியவை ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளன.

- 400 பனை விவசாயிகளுக்கு தரமான பனை வெல்லம் தயாரிப்பதற்கான பயிற்சியும், பயிற்சி பெற்றவர்களுக்கு

பனை வெல்லம் காய்ச்சத் தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்திடவும் மானியமாக ரூ.50.00 இலட்சம் அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- பனைப் பொருட்கள் குறிப்பாக பதநீர் விற்பனையினை அதிகரிக்க வேண்டி 10 தள்ளு வண்டிகள் மற்றும் 5 குளிர்பதனப் பெட்டிகள் ரூ.15.00 இலட்சம் செலவில் மதுரை, விருதுநகர், திண்டுக்கல் மாவட்ட பனை வெல்ல சம்மேளனத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

**6. வணிகம்**

கதர் அங்காடிகள், பாம் கிராப்ட் (Palm Craft) விற்பனை மையங்கள், கூட்டுறவுத் துறையின்கீழ் இயங்கிவரும் நியாய விலைக் கடைகள், பல்பொருள் சிறப்பங்காடிகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அங்காடிகள், ஆவின் நிறுவனம்



ஆகியவற்றின் மூலம் பனை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**6.1. பதநீர்**

பனை பொருட்களில் முதன்மையானது பதநீர் ஆகும். பனை வெல்லம் (கருப்பட்டி), பனங்கற்கண்டு, பனஞ்சர்க்கரை, பனங்கற்கண்டு மிட்டாய், கருப்பட்டி சாக்லேட் போன்ற பல்வேறு பனை உணவுப் பொருட்கள், பதநீரை மூலப் பொருளாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகின்றன. பருவ காலத்தில் பனை மரங்கள் அதிகம் உள்ள பகுதிகளில் பனை மரங்களிலிருந்து இறக்கப்படும் பதநீர், மக்கள் விரும்பி அருந்தக்கூடிய ஒரு பிரபலமான இயற்கை பானமாகும்.

2023–2024–ஆம் நிதியாண்டில், பனை விவசாயிகள் பயன்பெறும் வகையில் சுமார் 1 இலட்சம் லிட்டர் பதநீர், பனை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்து விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**6.2. பனை பொருட்கள் மற்றும் சுக்கு காபி விற்பனை**

இயற்கை பானங்கள் மற்றும் ஆரோக்கியம் தொடர்பாக பொது மக்களிடம் நல்லதொரு

விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள நிலையில், ஒன்பது வகையான மூலிகைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்படும் பனை வெல்லம் கலந்த சுக்கு காபி பனை வாரியத்தால் அறிமுகப்படுத்தப்பட்டு சென்னையில் பல்வேறு பிரதான இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், சேலம், ஏற்காடு, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை, பாளையங்கோட்டை, ஊட்டி மற்றும் திருவண்ணாமலை பௌர்ணமி கிரிவலப் பாதை ஆகிய இடங்களில் சுக்கு காபி உள்ளிட்ட பனை பொருட்கள் மற்றும் கதர் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

பல்வேறு வகையான பனை பொருட்களின் விற்பனையை அதிகரித்திட பிரத்யேகமான பனை பொருள் விற்பனை நிலையம் ஒன்று சென்னை, குறளகம் தரை தளத்தில் செயல்பட்டு வருகிறது.

### 6.3. பனை ஓலைப் பொருட்கள்

பனையிலிருந்து கிடைக்கும் உண்ண இயலாத பொருட்களான பனந்தும்பு தூரிகைகள், பனை ஓலை விசிறிகள், பாய்கள், கூடைகள், பனை நார் பொருட்கள் மற்றும் பல்வேறு வகையான



இயற்கையான வண்ணம் பூசப்பட்ட மற்றும் வண்ணம் பூசப்படாத பனை ஓலை கைவினைப் பொருட்கள் போன்றவை பனைத் தொழில் கைவினைஞர்களால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

### 6.4. இணையதளம் மற்றும் சமூக ஊடகங்கள் மூலம் பனை பொருட்கள் விற்பனை

இணையதள வழி விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு ஏற்கெனவே www.tnkvib.org மற்றும் www.tnkhadi.com ஆகிய இரு இணையதளங்கள் உருவாக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளது. இருப்பினும் குறிப்பாக இளைய தலைமுறையினரை கவரும் வகையில் ஆன்ட்ராய்டு மற்றும் iOS தளங்களில் செயல்படும் **"tnkhadi"** எனும் கைப்பேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் பனை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பனை பொருட்கள் தொடர்பான விழிப்புணர்வினை பொது மக்களிடத்தில் ஏற்படுத்திடவும், அதனை விளம்பரப்படுத்தி விற்பனையை அதிகரிக்கும் நோக்கத்திலும், இளைஞர்களை கவரும் வகையிலும், சமூக

ஊடகங்களான படவரி (Instagram), முகநூல் (Facebook), வலையொளி (YouTube) மற்றும் எக்ஸ் தளம் (X) ஆகியவற்றில் விளம்பரங்கள் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன.

**7. பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை**

கடந்த மூன்று ஆண்டுகளில் பனை பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரங்கள் பின்வருமாறு:–

| ஆண்டு | உற்பத்தி | விற்பனை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 2021–2022 | 1,381.18 | 1,505.93 |
| 2022–2023 | 1,817.70 | 2,084.35 |
| 2023–2024* | 1,909.86 | 2,146.85 |

***தணிக்கை செய்யப்படவில்லை.**

**ஆர். எஸ். ராஜகண்ணப்பன்**
**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்**